முபஸ்ஸிலன்.

# முஸ்லிம்களின் முன்னேற்றம்

## ஒரு ராஜீய நூல்

"தாருல் இஸ்லாம்" பத்திராசிரியரும்,
:குர்ஆன் மொழிபெயர்ப்பின்
வியாக்கியான கர்த்தாவும்,
மற்றும் பலநூல்களின் ஆசிரியருமான

**பா. தாவுத்ஷா**

அவர்களால்
எழுதப்பெற்ற.

*All Rights reserved.*

**1924**

விலை அணா 6.

பிரசுரம்:
…பிர்தகலாநிதி புக்டெப்போ.,
…ற்பெட்டி 248, சென்னை.

(Q7)
N24
181282

# நாயக வாக்கியம்

## (நாயக சரித்திரச் சுருக்கத்துடன்)

இது, பெரிய விஷயங்கள் அடங்கிய சிறிய வடிவமுள்ள அரிய புத்தகம். இதில் நபிகள் நாயகமவர்களுடைய ஜீவிய சரித்திரம் சுருக்கமாக விளக்கி எழுதப்பட்டிருப்பதோடு அவர்கள் மனிதகோடிகளின் நன்மையைக் கோரித் திருவாய்மலர்ந்தருளிய 223 திருவாக்கியங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இவ்வாக்கியங்கள் சிறந்த நன்மார்க்கத்தைப் போதிக்கக்கூடியவைகள். நாயகமவர்களுடைய சரித்திரமோ, அவர்களின் மகிமையை விளக்கி நல்ல விவேகத்தை யுண்டாக்கக்கூடியது. இப்புத்தகத்தைப் படிப்பதனால் சகல முஸ்லிம்களும் நாயகமவர்களின் சரிதையை ஒருவாறு உணர்ந்து கொள்வதோடு, அவர்களுடைய திருவாக்கியங்களின் உண்மைக் கருத்துக்களையும் அறிந்து அவற்றின்படி நடத்தற்கேதுவுண்டாகும். இதர மதஸ்தர்களுக்கும் நாயகமவர்களுடைய சரித்திரத்தையும் மகிமையையும் அறிந்து கொள்ளல் அவசியமாம். ஆதலின் இஃது எல்லோருக்குமே இன்றியமையாத புத்தகமாகும். இப்புத்தகம் சட்டைப் பைக்குள் அடங்கும் விதமாக ஒரு சிறிய கார்டு சைசில் உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு அழகிய பைண்டு செய்யப்பட் டிருப்பதால் எப்பொழுதும் கூடவே வைத்திருந்து எந்தநேரத்திலும் அசட்டையின்றி அச்சட்டையினின்றெடுத்துப் பார்த்துக்கொள்ள உபயோகமானதா யிருக்கும். இதன்விலை அணா 6 தான். 8 அணாவுக்கு வேலியில் அனுப்பினால் பார்சல் போஸ்டில் ஒரு பிரதி அனுப்பப்படும். மலாய் நாட்டிலுள்ளோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

அமிர்தகலாநிதி புக்டேப்போ
தபாற்பெட்டி 248 சென்னை.

# முஸ்லிம்களின் முன்னேற்றம்

By
பா. தாவுத்ஷா.
சென்னை

பிரசுரம்:

அமிர்த கலாநிதி புக்டெப்போ,
சென்னை.

*All Rights Reserved*

1924

விலை அணு 6.

# விஷய அட்டவணை

| விஷயம். | | | | பக்கம். |
|---|---|---|---|---|
| மேல்நாடு செய்தவேலை | ... | ... | ... | 3 |
| மேல்நாட்டு நோக்கத்தின் பலன் | | ... | ... | 14 |
| ஐரோப்பியரை ஆசியர் வெறுக்கும் காரணம் | | ... | ... | 18 |
| ஸென்னூஸி இயக்கம் | ... | ... | ... | 23 |
| இஸ்லாமும் தேசியககூஷியும் | ... | ... | ... | 30 |
| சென்ற மகாயுத்தத்தின் பலாபலன் | | ... | ... | 38 |
| ஐரோப்பாவுடன் சகவாசம் | ... | ... | ... | 42 |
| ருஷ்யாவின் நோக்கம் | ... | ... | ... | 45 |

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي

# முஸ்லிம்களின் முன்னேற்றம்

## மேல்நாடு செய்த வேலை

**தாருல் இஸ்லாம்** என்னும் நம் முஸ்லிம் உலகமானது இவ்வுலகின் ஐந்து கண்டங்களிலும் அதிகமாகப் பரந்து கிடக்கின்றதென்பது அனைவருக்கும் அறியக்கிடக்கும் அரிய விஷயமன்றோ? மேற்கே மோராக்கோ (மகரிப்) முதல் கிழக்கே சீனாவரையிலும், வடக்கே துருக்கிஸ்தான் முதல் தெற்கே காங்கோ வரையிலும் நம்முடைய தீனுல் இஸ்லாமானது அதிக அடர்த்தியாகப் பாவியிருக்கின்றது. இந்த நான் கெல்லைக் குள்ளல்லாமல் இன்னும் லண்டன் பர்லின் அமெரிக்கா முதலிய முக்கியஸ்தலங்களில் பாவி வருவதோடு மற்றும் இவ்வுலகில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இந்த இஸ்லா மார்க்கமானது இப்பொழுது நுழைந்து வருகிறது. நமது தாருல் இஸ்லாத்தில் தற்போது 44 அல்லது 45 கோடி முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் ஒவ்வொரு தேசத்திலும் முஸ்லிம்களே முழுதும் நிறைந்திருக்கிறார்களென்று எண்ணவேண்டாம். அராபிதேசம், பாரஸீகம், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் எல்லா ஜனங்க

ளும் முஸ்லிம்களாகவே யிருக்கின்றனர். சின்ன ஆசியா, மிஸ்ர், துருக்கிபோன்ற தேசங்களில் இடையிடையே சிற்சிலகிரிஸ்தவர்களும் காணப்படுகின்றனர். இந்தியாவின் ஜனத்தொகையில் ஐந்தி லொருபங்கே முஸ்லிம்கள். சீனுவிலோ முஸ்லிம்கள் மிகக் குறைந்தவர்களா யிருக்கின்றனர். இவ்வாறிருந்தும் இவ்வுலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் ஒருவரை யொருவர், அவர் எத்தேசத்துக்குச்சொந்தமானவராயினும் எச்சாதியைச் சேர்ந்தவராயினும் எப்பாஷையைப் பேசக்கூடியவராயினும், உடன் பிறந்த சகோதரராகவே கருதிவருகின்றனர். முஸ்லிம்கள் ஆபிரிக்காவிலுள்ள கருப்பு மக்களாயினும், ஐரோப்பாவிலுள்ள வெள்ளை மனிதர்களாயினும், சீனுவிலுள்ள மஞ்சள் மாந்தராயினும், அவர்களுக்குள் **இஸ்லாம்** என்னும் ஒற்றுமைத்தளை மிகவலிதாயிருப்பதனுல் தங்களை யெல்லாம் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவராகவே மதித்துக்கொண்டு அதற்கேற்றவாறு நடந்து வருகின்றனர். இதனுல் இந்த முஸ்லிம்களுக்குள் அவர்களுடைய இஸ்லாமானது இறைவனுல் அருளப்பட்ட ஒரு யாக்கைபோல் எல்லோரையும் ஒருமனப்படும்படி செய்கின்றது. இந்த ஒற்றுமையின் காரணமாக அவர்களுக்குள் எப்பொழுதும் சகோதரத்துவ மென்னும் ஒரு வகைத் தெய்விக சக்தியானது அதிக உறுதியாக் வேரூன்றியிருக்கிறது.

இஸ்லாத்தின் ஒற்றுமை இப்படிப்பட்ட தென்பதைச் சென்ற சில ஆண்டுகளாகவே ஐரோப்பிய மேல் நாட்டினர் அறிய ஆரம்பித்திருக்கின்றனர். அதற்குமுன் ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் இவ்வுலகிலுள்ள முஸ்லிம்களெல்லாம் மிகக்கேவலமான பாதாளத்தில் வீழ்ந்து கிடப்பதாக எண்ணி யிருந்தார்கள். இதிலொன்றும் ஆச்சரியப் படுவதற்கு இடமில்லை. ஏனெனின், ஆதியில் அராபி முஸ்லிம்களே இவ்வுலகிலுள்ள எல்லா ஸயன்ஸ் ஞானங்களுக்குரிய அஸ்தி

வார முழுதையும் ஏற்படுத்தி யிருந்தும், சென்ற சில நூற்றூண்டுகளாக நம்முஸ்லிம்கள் நவீனமான நாகரிகத்திலும் ஸயன்ஸென்னும் நல்லறிவின் ஞானத்திலும் அந்த ஐரோப்பியர்களைக் காட்டினும் அமெரிக்கர்களைக் காட்டினும் மிக மிகப் பின்னிடைந்து விட்டதால் முஸ்லிம்களின் ராஜீய, தேசிய விஷயங்களும் இன்னும் நம்முடைய மார்க்க(தீன்) விஷயமும் மேல்நாட்டினரின் அகம்பாவமான ஆட்சியின் கீழ் அகப்பட்டுக்கொண்டு பாக்குவெட்டியி லகப்பட்ட பாக்கைப்போல் விழிக்கின்றன. சுருங்கச்சொல்லுமிடத்து, முஸ்லிம் உலகமானது தனது கல்வியிலும் நாகரிகத்திலும் எவ்வளவுக் கெவ்வளவு பின்னிடைந்து வந்ததோ அவ்வளவுக் கவ்வளவு மேல் நாடானது அவ்விஷயங்களில் முன்னடைந்து நமது தாருல் இஸ்லாத்தை நாலு பக்கத்திலும் வந்து வானம் கவிந்தது போல் வளைந்து கொண்டது.

ஆனால் அம்மேல்நாட்டு வாசிகளெல்லாம் இப்பொழுது சமீபகாலமாகத் தங்களுடைய தறுகண்மையினுலான கொடுங்கோன்மையினுலேயே கீழ்நாட்டிலுள்ள முஸ்லிம்களெல்லாம் தமது நீண்டகால நித்திரையினின்றும் விழித்துக் கொண்டு மேல் நாட்டுக் கொடிய ஆட்சியினின்றும் தப்ப வேண்டுமென்று முயற்சிப்பதற்காக ஒரு விதமான ஒற்றுமைக் கிளர்ச்சியைச் செய்யத் தலைபட்டு விட்டன ரென்று நன்குணர ஆரம்பித்து விட்டார்கள். மேல்நாட்டுக் கொடுங்கோன்மையை யெல்லாம் எத்தனை காலத்துக்குத்தான் கீழ் நாடானது சகித்துக் கொண்டிருக்கும்? மேல்நாட்டாரின் கொடிய ராஜ்யாதிகாரத்தினின்றும் விடுதலை பெறவேண்டுமென்னும் எண்ணத்துடனேயே ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் இன்னும் ஏனை நாடுகளிலுமுள்ள முஸ்லிம்களனைவரும் இப்பொழுது புதிய எண்ணங்களுடனும், புதிய உணர்ச்சிகளுடனும், புதிய ஆசைகளுடனும் பரபரப்பாக

வேலை செய்யத்தொடங்கி யிருக்கின்றனர். தாருல் இஸ்லாம் முழுதும் ஒருவித நூதன உல்லாச உணர்ச்சியானது உட்புகுந்து வேலைசெய்கின்றது. இவ்வுணர்ச்சியினால் முஸ்லிம்களுக்குள் ஒருவகைப் புரட்சி யுண்டாதல் கூடும்; பூலோக ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்குக்கு அதிகமாயுள்ள முஸ்லிம்களுக்குள் அப்படிப்பட்ட புரட்சி யுண்டாகும் போது அதனால் இவ்வுலகிலுள்ள ஏனைமனிதர்களுக் கிடையிலும் ஒருவகை மாறுபாடு ஜனிக்கக்கூடும். ஆனால் முஸ்லிம்களின் இந்தப் புரட்சியின் காரணமானது மகாசிக்கலாகக் காணப்படுகின்றது; மதவிஷயத்திலும் கல்வி விஷயத்திலும் ராஜீய விஷயத்திலும் தேசீய விஷயத்திலும் ஆசார விஷயத்திலும் வியவகார விஷயத்திலும் பொருள்வின்யோக விஷயத்திலும் அருள் வருவாய் விஷயத்திலும் நம் முஸ்லிம்களின் கதியானது இப்பொழுது மேல் நாட்டுக்கொடுங்கோன்மையின் கீழ் மாட்டிக்கொண்டு விழிப்பதால் இனிவரும் நம்முடைய புரட்சியானது இவ்வுலகிலுள்ள மேற்கூறிய எல்லா விஷயங்களையும் பாதிக்கக் கூடும். அந்தப் புரட்சிக்குப் பின்னால் இந்த தாருல் இஸ்லா மானது ஒரு நூதன உலகமாகக் காணப்படும்.

இஸ்லாமார்க்கத்தின் இந்தப் புரட்சிக்கு நேர்முகமான முக்கிய காரணமா யிருப்பது இப்பொழுது சமீப காலத்துக்கு முன் நடந்த மகா யுத்தந்தான்; ஆனால் அதற்கு வேண்டிய அஸ்திவாரமானது அந்த ஜெர்மன் யுத்தம் தொடங்குவதற்கும் பன்னெடுங்காலம் முன்னரே போடப்பட்டிருந்தது. சுமார் இப்பொழுதைக்கு நூறு வருஷங்களுக்கு முன்னேயே இந்தப் புரட்சியான விருத்திக்குரிய விதையானது போடப்பட்டு, அதன் பயிர் நாளடைவில் சிறிது சிறிதாகக் கொடிபடர்ந்து வந்தது; ஆரம்பத்தில் அது மெதுவாகவும் கண்ணுக்குப் புலப்படாமலும் சிறுகச் சிறுக வளர்

ந்து வந்தது; ஆனால்; பிறகு காலம் செல்லச் செல்ல அந்தச் சிறு கொடியானது ஒரு பெரிய மரமாக மாற ஆரம்பித்து விட்டது; இதனால் இஃது எல்லாருடைய பார்வையிலும் மிக ஸ்பஷ்டமாகப்புலப்படத் தொடங்கிற்று. ஆனால் இப் பொழுது இந்த மகா யுத்தத்தின் பயனாக அம்மரமானது திடுமென்று பூத்துக் காய்த்துப்பழுக்க முன்வந்து விட்டது.

உண்மையாகவே ஆரம்பத்தில் முஸ்லிம்களுடைய இந்த உணர்ச்சியானது ஐரோப்பியரின் கொடுமையான ராஜ்ய பரிபாலன முறையினால் உண்டாகவில்லை; ஆனால் முஸ்லிம்கள் தங்களுடைய மதாசார ஒழுங்குகளை யெல்லாம் கைவிட்டு இடையில் தவறான வழியில்செல்ல ஆரம்பித்து விட்டார்களென்று அவர்களை யெல்லாம் மீண்டும் உண்மை யான இஸ்லாமிய வழியில் திருப்ப வேண்டு மென்னும் பரிசுத்த நோக்கத்துடன் ஒரு வகையார் முன்வந்தனர். இஸ்லாத்தைப் பரிசுத்தம் செய்யவேண்டு மென்னும் நல்நோக்கத்துடன் துணிந்து முன்வந்த அக்கூட்டத்தினர் முதன் முதலில் அரபு நாட்டின் பாலைவனத்திலிருந்துதான் கிளம்பினர். அவர்களுடைய தலைவரின் பெயர் **அப்துல்வஹ்ஹாப்** என்றிருந்ததனால் அக்கூட்டத்தினருக்கே **வஹ்ஹாபிகள்** என்று பெயர்வழங்க லாயிற்று. எந்த அரபு தேசத்தின் மணல் வெளியிலிருந்து ஆதியில் நமது நபிகள் நாயகமவர்கள் தோன்றினார்களோ அதே அரபு நாட்டின் பாலைவனத்திலிருந்தே அந்த அப்துல் வஹ்ஹாப் என்பவரும் வெளி வந்தார். எவ்வாறு ஆதியில் முஸ்லிம்கள் நம் ரஸூல் நாயகமவர்களின் உபதேசத்தை உறுதியாகக் கடைப்பிடித்து அப்பொழுதறிந் திருந்த உலகத்தின் ஒரு பாதியைக்கைப் பற்றி அங்கெல்லாம் தீனுல் இஸ்லாமென்னும் ஏக தெய்வக் கொள்கையையும் அரபிகளின் அழகிய நாகரிகத்தை

யும் பரத்த ஆரம்பித்தார்க ளென்னும் உண்மையைத் தெரிந்து கொண்டு அந்த வஹாபிகள் மீண்டும் இவ்வுலக முழுதையும் அப்படிப்பட்ட முஸ்லிம் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்து விடலாமென்னும் உயரிய நோக்கத்துடனேயே முயன்று பாடுபட ஆரம்பித்தனர். ஆனால் தீனுல் இஸ்லாத்தில் இடையில் வந்து புகுந்துள்ள குற்றங் குறைகளை மட்டும் நிவர்த்தி செய்வதைவிட்டுக் குர்ஆன் ஷரீபினுலும் நம் நபிகள் நாயகத்தினுலும் நிலை நிறுத்தப்பட்ட இஸ்லா மார்க்கத்தையே அவர்கள் அடியோடு புரட்டித் திருத்த முன்வந்தார்கள். இதனால் அந்த வஹாபிகளின் எண்ணமானது ஒன்றும் பலிக்காமல் எல்லா முஸ்லிம்களின் அதிருப்திக்கும் ஆளாய் மீண்டும் தங்களுடைய மணல் வெளியான ஜன்ம தேசத்துக்குள் புக்கு மறைந்தனர். அந்த அப்துல் வஹ்ஹாபின் எண்ணமானது முழுதும் வெற்றியடையாமற் போயினும், நமது தீனுல் இஸ்லாத்தில் ஆதாரமற்ற பற்பல அனுசாரங்களெல்லாம் இடையில் வந்து புகுந்து விட்டன வென்றும், அவற்றையெல்லாம் அகற்றி இஸ்லாத்தைப் பண்டை நிலைமைப்படி புதுப்பிக்க வேண்டுமென்றும் தோன்றின நல்லெண்ணம் மட்டும் நாளடைவில் பல முஸ்லிம்களின் மனத்திலும் உறுத்திக்கொண்டே யிருந்தது. ராஜீய தேசிய விஷயங்களில் அந்த வஹாபிகளின் முயற்சியானது தடைப்பட்டு நின்று விட்டது; ஆனால் மார்க்க விஷயத்தில் மட்டும் அவர்களுடைய நல்லெண்ணமானது எங்கும் பரவத் தலைப்பட்டு நாள் தோறும் அது வளர்பிறைபோல் விருத்தியாகிக் கொண்டேவந்தது. அந்த அராபிதேசத்தின் மத்தியிலிருந்து மறுபடியும் அந்தப் பரிசுத்த எண்ணமானது இவ்வுலகின் நாலுபக்கங்களிலும் சுடர் வீசி எரியத் தலைப்பட்டது. குர்ஆன் ஷரீபினுலும் நம் ரஸூல் நாயக மவர்களின் முயற்சியினுலும் நிலைநிறுத்தப்பட்ட அந்தப் பரிசுத்தமான சுத்த

சத்திய இஸ்லாமார்க்கத்தைப் பழய முறைப்படியே பரிசுத்தம் செய்துவைக்க வேண்டுமென்னும் ஒரே நல் நோக்கமானது பலபேர்களுடைய மனத்திலிருந்த போதிலும் காலக்கிரமத்தில் இவ்வெண்ணமானது மற்றெல்லா விதமான மத இயக்கங்களைப் போலவே பல்வகையான அபிப்பிராய பேதங்களுக்கும் அந்தரங்க எண்ணங்களுக்கும் உட்பட்டுச் சன்ன பின்னலான சிக்குக்களுக்கிடையில் அகப்பட்டு அவஸ்தையுறலாயிற்று. சில சமயங்களில் இப்படிப்பட்ட அபிப்பிராய பேதங்களுக்கிடையில் முஸ்லிம்கள் ஒருவரோடொருவர் அசிகையான விரோதம் பாராட்டவும் தொடங்கி விட்டார்கள். இஸ்லாத்திலுள்ள ஆதாரமற்ற அனுசாரங்களை யெல்லாம் அடியோடு நீக்க வேண்டு மென்னும் அந்தப் பரிசுத்தமான ஒரே எண்ணமே பலபேர்களுக் கிடையில் பலவிதமான அபிப்பிராய பேதத்தை உண்டு பண்ணி விட்டது.

ஆனால் தீர்க்கமாக எல்லா விஷயங்களையும் முன்னறியக் கூடிய தாராளச் சிந்தையுடைய பல முஸ்லிம் ஞானவான்களெல்லாம் பண்டைக்காலத்தில் ஸ்பெய்னிலிருந்து அராபி முஸ்லிம்களால் ஐரோப்பாவில் அஸ்திவாரம் போடப்பட்டிருந்த கல்வியும் நாகரிகமும் மிகுதமாகக் கொடி படர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்திருந்த நிலைமையில் அவற்றாலுண்டாகக் கூடிய நன்மைகளை யெல்லாப் முஸ்லிம் உலகத்துக்குள் கொண்டுவந்து இஸ்லாத்தைப் பரிசுத்தம் செய்து ஒழுங்கு படுத்த வேண்டுமென்று கருதினார்கள். ஆனால் அதே சமயத்தில் மற்றுஞ்சிலர் கிளம்பி மேல்நாட்டுக் கல்வியும் நாகரிகமும் இஸ்லாத்துக்கு ஒரு போதும் தேவையேயில்லையென்று பிடிவாதமாய் எதிர்க் கக்ஷிசெய்ய ஆரம்பித்து விட்டனர். மேல்நாட்டு நாகரிகத்தையும் கல்வியையும் இஸ்லாத்துடன் இணைத்து விடவேண்டு மென்பது ஒரு வர்க்கத்தாரின் நோக்கமாயிருந்து வந்தது. அவை அறவே கூடா

வென்பது மற்ெறாரு வர்க்கத்தாரின் பிடிவாதமாயிருந்தது. ஆனால் இருவகையாரின் எண்ணமும் முழுதும் சரியென்றாவது அல்லது முழுதும் தவறென்றாவது சொல்வதற்கில்லை. ஏனெனின், உண்மையானது இரண்டுக்கும் மத்தியிலிருக்கிறது.

மேல்நாட்டுக் கல்வியையும் நாகரிகத்தையும் பின் பற்றும் விஷயத்தில் மேற்கூறிய இருககூறியினரும் தம்முள் அபிப்பிராய பேதமுடையவரா யிருப்பினும் இஸ்லா மார்க்கத்தை மட்டும் முன்னிருந்த கௌரவமான உச்ச நிலைமைக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்பது மட்டும் எல்லோருடைய உறுதியான எண்ணமாக இருந்து வந்தது. பண்டைக்காலத்தில் பகுதாதிலும் கார்டோவாவிலும் கலீபாசர்கள் அரசாண்டுவந்த காலத்தில் தீனுல் இஸ்லாத்துக்கு எவ்வளவு கௌரவ மிருந்ததோ அதே விதமான உச்ச நிலைமைக்கு மீண்டும் இந்த இஸ்லா மார்க்கத்தைக் கொண்டுவந்து விட வேண்டு மென்பதில் மட்டும் எவருக்கும் அபிப்பிராயபேதம் இருந்த தில்லை.

ஆனால் யார் விரும்பிய போதிலும் விரும்பாம லிருந்த போதிலும் மேல்நாட்டு நாகரிகமானது முஸ்லிம் உலகத்துக்குள் தானே கிரமேணுவாய் நுழைய ஆரம்பித்து விட்டது. இதனால் முஸ்லிம் உலகம் மட்டுமல்லாமல் கிழக்குப்பகுதியிலுள்ள எல்லாத் தேசங்களிலுள்ள எல்லாஜாதியார்களுமே இனியில்லா வண்ணம் பாதிக்கப் பட்டார்கள். இப்படிப் பட்ட மேல்நாட்டுத் தொடர்பானது சென்ற 19-வது நூற்றாண்டின் மத்தியிலிருந்துதான் அதிகமாகக் கீழ் நாடுகளில் பரவ ஆரம்பித்தது. அதுமுதல்தான் ஐரோப்பியமேல் நாட்டினர் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தங்களுக்காக அதிகமான குடியேற்ற நாடுகளையெல்லாம் உண்டுபண்ணிக் கொண்டு அங்குள்ள முஸ்லிம்க ளனைவரையும் அதிகமாக அடக்

கித் தங்களுடைய தறுகண்மையான கொடுங்கோன்மை யின் கீழ்க் கொண்டுவரத் தலைப்பட்டனர். அதுமுதல் யார் தடை செய்த போதிலும் தடைசெய்யாம லிருந்தபோதி லும் மேல்நாட்டு நாகரிகம் என்னப்படுவது அதிகம் வந்து நம்முள் வலுவில் புகுந்துகொண்டன. ரஸ்தாக்களும், ரயில் வேக்களும், தபால்களும், தந்திகளும், பத்திரிகைகளும், புத்த கங்களும், இன்னும் பலவிதசாதாரணமான எண்ணங்களும் அபிப்பிராயங்களும் மிகுதமாக எல்லோரையும் வந்து சூழ் ந்து பற்றிக்கொண்டன. ஐரோப்பியரின் நீராவிக்கப்பலா னது மேற்கே அஸ்தகிரியிலிருந்து கிழக்கே உதயகிரி மட்டு முள்ள எல்லாப் பூபாகங்களையும் தன்னுள் வளைத்துக்கொ ண்டது. மேல்நாட்டு இயந்திர உதவியால் செய்யப்பட்ட எல்லாவிதமான அன்னியநாட்டுச் சாமான்களும் கீழ்நாடு களிலுள்ள ஒவ்வொரு பெரும் பெரும் பட்டணமுதல் சிறு சிறு குக்கிராமம் வரையில் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் புகை போல் நுழைய ஆரம்பித்து விட்டன. மற்றெல்லாப்பொருள் களும் ஒவ்வோரிடத்திலும் புகுத முடியாமற் போயினும் மேல் நாட்டுத்துணிமணிகளும் மண்ணெண்ணெயும் தையல் மெஷீனும் நுழையாத பாகமே கீழ் நாட்டில் எங்கும் இரா தென்று நிச்சயமாய்க் கூறலாம். முப்பது வருஷங்களுக்கு முன்னிருந்த மனிதர்களெல்லாம் மூவ்வாயிரம் ஆண்டுகளு க்கு முன்னிருந்தவர்களைப் போல் வாழ்ந்து வந்தார்கள்; ஆனால் இப்பொழுதுள்ள மனிதர்களோ மின்சார (ட்ராம்) வண்டியிலும் புகை (ரயில்) வண்டியிலும் சென்று தங்களு டைய தினமான வேலையை முடித்து வருகிறார்கள். கீழ் நாட்டாரின் பழக்க வழக்கங்களும் அபிப்பிராய பேதங்க ளும் அம்மேல்நாட்டு நாகரிகங்களால் அதிகம் பாதிக்கப்பட் டுவந்தன.

இஸ்லாமார்க்கமானது எற்கனவே கண்விழித்து வரும்

போது அதற்கனுசரணையாக அம்மேல்நாட்டுக் கல்வியும் நாகரிகமும் உதவிபுரிந்த போதிலும் அந்த மேல்நாட்டு நாகரிக நடை உடை பாவனைகளால் எவ்வளவு தூரம் பாதகம் விளையக்கூடுமென்பதையும் மற்றெல்லோரைக் காட்டினும் முஸ்லிம்கள் நன்குணரத் தலைப்பட்டனர். மேல்நாட்டுக் கல்வியினாலும் நாகரிகத்தாலும் ஹிந்துமத ஆசார வியவகாரங்களெல்லாம் மிகுதம் பாதிக்கப்பட்டு வருவதைக் கண்டு முஸ்லிம்கள் தங்களுடைய மதவிஷயத்தில் அதிகம் கவலை கொண்டவராய் அம்மேல்நாட்டுக் கல்வியாலும் நாகரிகத்தாலும் இஸ்லாத்துக்கு எவ்வளவு நன்மை யுண்டாகக்கூடுமோ அதைக்காட்டினும் தீமையே அதிகம் உண்டாகக் கூடுமென்று அஞ்சினார்கள். இஸ்லாத்தை ஒழுங்குடன் நிலைநிறுத்த வேண்டுமென்னும் உள்ளெண்ணமானது ஒருபுறம் வேலை செய்து கொண்டு வரும்போது ஐரோப்பிய நாகரிகமும் கல்வியும் மற்றொரு புறத்தில் திகிலை யுண்டுபண்ணத் தொடங்கிவிட்டன. உண்மை இவ்வாறிருக்கும்போது இதற்கெல்லாம் மேலாக மேல்நாட்டாரின் தறுகண்மையான கொடிய ராஜ்ய பரிபாலனமுறையானது முஸ்லிம்களுடைய மனத்தை வேதனை யடையும்படி செய்துவிட்டது. முஸ்லிம்கள் தங்களுடைய தெய்வத் திருமறையில் கட்டளை யிடப்பட்டபடி ஆளும் அரசர்களிடம் எவ்வளவோ பயபக்தி விசுவாசத்துடன் நடந்துவந்தும் அந்த ஐரோப்பியரின் குறும்புத்தனமுள்ள கொடுங்கோன்மையினால் நம்முஸ்லிம்களுடைய மனமானது மிகவும் வேதனைப்பட்டுப் புழுங்கிக்கொண்டிருந்தது.

ஆனால் இப்படிப்பட்ட உணர்ச்சிக்கெல்லாம் மூலகாரணமாயிருந்தது, மேல் நாட்டுக்குள் புகுந்து அங்கிருந்து வெளிப்பட்டிருக்கும் ஆதிகால அரபிகளால் விதை விதைக்கப்பட்ட அறிவு நூல்சம்பந்தமான நாகரிகந்தான். மேல்

காட்டாரின் ஆட்சி முறையானது எவ்வளவுக் கெவ்வளவு கீழ் நாட்டில் பரவ ஆரம்பித்ததோ அவ்வளவுக் கவ்வளவு அம்மேல்நாட்டு அநாகரிகத்துடன் நாகரிகமும் நல்லுணர்ச்சியும் நன்கு பரவிவந்தன. ஆங்கிலேயரின் ஆட்சிமுறையானது எவ்வளவுக் கெவ்வளவு ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரவத்தலைப்பட்டதோ அவ்வளவுக் கவ்வளவு முஸ்லிம்களின் கண்ணும் திறக்க ஆரம்பித்தது. பிரிட்டிஷாரின் ஆட்சி முறை சம்பந்தத்தா லுண்டாகிய செல்வாக்கு நாணயப்பழக்கங்களாலும், தபால்தந்தி முதலிய சாதனங்களாலும், புத்தகம் பத்திரிகை முதலிய உதவிகளினாலும், ரயில் ரஸ்தா முதலிய போக்கு வரத்துச் சாதனங்களாலும், பிரிட்டிஷ் கோர்ட்டில் வழங்கிவரும் நியாய அநியாயங்களினாலும் கீழ்நாட்டு முஸ்லிம்களெல்லாம் ஆங்கிலேயரின் நல்ல குணங்கள் இவ்வளவுதானென்றும் அவர்களுடைய தீக்குணங்களெல்லாம் எவ்வளவு அதிகமாயிருக்கின்றனவென்றும் அம்மேல்நாட்டாரின் ஆழ நீளங்களையெல்லாம் அதிகம் தெரிந்து கொண்டனர். மேல்நாட்டார் தங்களுடைய சொந்த நன்மையைக் கருதிக் கீழ்நாட்டு வாசிகளையெல்லாம் வெறும் மிருகப் பிராயமானவர்களெனக்கொண்டு அவர்களிடத்திலெல்லாம் தங்களுடைய சொந்தநாகரிகத்தை வலுவில் புகுத்த ஆரம்பித்தனர். அப்பால் அவர்களுடைய வஞ்சகத் தொழிலானது அவர்களுக்கே துன்பமாய் விளையத் தலைப்பட்டுவிட்டது. கீழ்நாட்டாரின் நடை உடை நாகரிகமெல்லாம் மேல்நாட்டுத் தொடர்பால் மாற ஆரம்பித்ததானது அம்மேல் நாட்டுக்கே அனர்த்தத்தை உண்டுபண்ணி விட்டது. மேல்நாட்டாரின் கெரோஸீன் ஆயிலும் (மண்ணெண்ணெயும்), தையல் மெஷீனும், மற்றுமுள்ள துணிமணிகளும் கீழ்நாட்டிலுள்ள மூலை முடுக்கிலெல்லாம் நுழைந்து விட்டபோதிலும் இவற்றாலெல்லாம் இம்முஸ்லிம்கள் அடையும் பிரயோஜ

னத்தைக் காட்டினும் இவர்களுக்கு அம்மேல் நாட்டாரிடம் உண்டாயிருக்கும் வெறுப்பே அதிகமாயிருந்து வருகிறது. இதற்கெல்லாம் யார் காரணமென்று கேட்கின்றோம்.

## மேல்நாட்டு நோக்கத்தின் பலன்

**மேல் நாடானது** கீழ்நாட்டின்மீது ஆதிக்கம் கொண்டதன் பயனாக அந்தக் கீழ் நாட்டாரின் அறிவும்ஆன்ம சம்பந்தமான ஞானமும் அளவுக்குமீறிப் பாதிக்கப்படாமல் போகவில்லை. மிகவும் தாராளச் சிந்தையையுடைய முஸ்லிம்கள் எவ்வாறு மேல்நாட்டுக் கல்வியையும் நாகரிகத்தையும் அடியோடு பின்பற்றவேண்டுமென்று முன் வந்தார்களென்பதை முன்னமே நாம் கூறியுள்ளோம். உண்மையில் முஸ்லிம்களின் முற்கால நாகரிகத்தையே ஐரோப்பிய மேல் நாட்டினர் பின்பற்றி அவ்வளவுதூரம் அவர்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்களென்று நம்பிய அம்முஸ்லிம் தலைவர்கள் அவ்வளவு அழுத்தமாக அம்மேல்நாட்டுக் கல்வியையும் நாகரிகத்தையும் பற்றி ஸிபாரிஷ் செய்ய முற்பட்டனர். ஆனால் காலக்கிரமத்தில் மேல் நாட்டுக் கல்வியானது கீழ் நாட்டாரின் அறிவையும் ஆன்மஞானத்தையும் பாதிக்கத் தலைப்பட்டவுடன் கீழ் நாட்டினரெல்லாம் மேல்நாட்டுக் கல்வியையும் நடையுடை நாகரிகத்தையும் கொஞ்சங் கொஞ்சமாக வெறுக்கத் தலைப்பட்டனர். மனிதவாழ்க்கையினாலடையக் கூடிய இகலோக சம்பந்தமான எல்லாவிதசுகபோகங்களும் கீழ்நாட்டினரைக் காட்டினும் மேல்நாட்டினரிடத்தில் அதிகமாகக் காணப்பட்டதனால் அப்படிப்பட்ட இன்ப

சுகத்துக்குவேண்டிய சுகபோகங்களை யெல்லாம் நம்கீழ்நாட்டினர் அதிகஆவலுடன் பின்பற்றத்தொடங்கினர். ஆனால் அம்மேல்நாட்டு வாசிகளின் அறிவும் ஆத்மஞானமும் கீழ்நாட்டுவாசிகளின் மூளைக்குள் நுழைய ஆரம்பித்தவுடன் நம் கீழ்நாட்டினர் விழித்துக்கொண்டு அம்மேல்நாட்டு அறிவையும் ஆத்மஞானத்தையும் அடியோடு வெறுக்கஆரம்பித்தனர். ஆதியில் ஆங்கிலத்தைக் கற்று அதனால் சிறிது ஊதியம் பெற்று மேன்மையுற்றோரெல்லாம்கூடி மேல்நாட்டுக் கல்வியையும் நாகரிகத்தையும் அளவு கடந்து புகழ்ந்த போதிலும் பிறகு சிறிது காலத்துக்குள் நம்முடைய கீழ்நாட்டுத் தத்துவ முறைகளைக் காட்டினும் மேல்நாட்டு ஆத்மஞான முறைகள் எவ்வளவு தாழ்ந்தவை யென்பதைத் தாமே நன்குணர்ந்து கொண்டார்கள். கொல்லர் தெருவில் ஊசி விற்பதேபோல் எல்லாவிதமான மார்க்கஞானங்களுக்கும் தாயகமாகிய ஆசியாவிலிருந்து உதிர்ந்துபோன சில ஆத்மஞான முறைகளை வைத்துக்கொண்டு அம்மேல் நாட்டினர் நம் கீழ் நாட்டினரை மிரட்ட எத்தனித்தபோதுதான் அவர்கள்மீது நமக்கு அளவுகடந்த வெறுப்புண்டாயிற்று. ஆனால் அவர்களுடைய அகம்பாவம் படைத்த அந்தத் தறுகண்மையினின்றும் நாம் மீளவேண்டுமென்று முயலும்போது அவர்களுடைய மிருகபலமானது நம்மை நாலுபக்கத்திலும் கண்ணிவலைபோல் நன்றாகச் சூழ்ந்துகொண்டு விட்டது. இதன் பயனாக இப்பொழுது எல்லாக் கீழ்நாட்டுவாசிகளின் மனத்திலும் மேல்நாட்டினரின் கல்வியையும் நடையுடை நாகரிகத்தையும் அடியோடு வெறுத்து வர்ஜனை செய்யும்படியான ஓர் எண்ணமானது ஆணிவேர்கொண்டுவிட்டது. மேல்நாட்டு வாசனையே இப்பொழுது கீழ் நாட்டில் வெறுப்பை யுண்டு பண்ணுகிறது. மேல் நாட்டினரின் மிருகபலமான மாய சூழ்ச்சியினின்றும் தப்பிப்பிழைக்கவேண்டு மென்பதே ஒவ்

வொரு கீழ்நாட்டு வாசியின் எண்ணத்திலும் பதிந்து கிடக்கின்றது.

கீழ்த்திசையில் இன்ன ஜாதியாரிடத்தில்தான் இப்படிப்பட்ட வெறுப்பு இருக்கிறதென்றும் இன்னாரிடத்தில் இல்லையென்றும் ஒரு வரையறை செய்வது முடியாது. கிழக்குத் திசையிலுள்ளவர்கள், அவர்கள் எத்தேசத்துமனிதராயினும் எச்சாதியினரைச் சேர்ந்தவராயினும் எல்லோரும் இந்த மேல்நாட்டினரை அடியோடு வெறுக்கின்றனர். ஐரோப்பிய மேல்நாடென்று சொன்னமாத்திரத்திலேயே ஆசியக் கீழ்நாட்டினருக்கு அளவுகடந்த ஆத்திரமும் வெறுப்பும் உண்டாகின்றன. மேல்நாடுகளில் இதுவரையில் தோன்றியிராததும் அம்மேல்நாட்டு மனிதர்களின்மனத்தில் நுழையக்கூடாததுமாகிய அவ்வளவு அபாயமுள்ளதும் பயங்கரமுள்ளதுமான மனக்கொதிப்பானது கீழ்நாடுகளில் உண்டாயிருக்கிறது. இப்படிப்பட்ட மனக்கொதிப்பின் காரணமாக யாவராலும் எதிர்பார்க்க முடியாத அவ்வளவு கொடிய தீமைகளையுடைய மாறுபாடுகளெல்லாம் எந்த நிமிஷத்திலும் விளைதல் கூடும். கீழ் நாட்டினரின் மனக்கொதிப்பானது மேல் நாட்டினரின் தறுகண்மையான அகம்பாவமென்னும் அடுப்பின் மீது கொதித்துக் கொண்டிருக்கிறது. இஃது எப்படிப்பட்ட வேளையிலும் எதிர் பாராத விபரீதத்தை விளைக்கலாம். எவ்வளவுக் கெவ்வளவு மேல் நாடானது தன்னுடைய மிருகபலத்தினால் கீழ் நாட்டை அடக்கி யாளலாமென்று முயல்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு இக்கீழ் நாடானது அம்மேல் நாட்டு விலங்கினின்றும் விடுபடப்பார்க்கின்றது. ராஜீய விஷயத்திலும் தேசிய விஷயத்திலும் பொருள் வருவாய் விஷயத்திலும் அறிவு நூல் விஷயத்திலும் ஆத்மஞான விஷயத்திலும் அதிகமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் கீழ்நாடானது தன்னு

டைய விலங்கைத் தறித்துக்கொள்ள வெகுபாடு படுகின்றது. இப்படிப்பட்ட முயற்சியால் மனிதவர்க்கத்தாருக்கு இன்ன விதமான தீமைதான் உண்டாகக்கூடு மென்று ஒருவராலும் குறிப்பிட்டுச் சொல்வது முடியாது. கீழ் நாடு முழுதும் எங்கே சென்று பார்த்தபோதிலும் அங்கெல்லாம் அதிருப்தியும் அசிகையும் ஆத்திரமுமே காணப்படுகின்றன. சாந்தி யென்பதும் திருப்தி யென்பதும் குதிரைக் கொம்பாகி விட்டன. ஒவ்வொரு பட்டணத்திலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும், ஒவ்வொரு வீட்டிலும் அதிருப்தியே குடிகொண்டிருக்கிறது. எப்பொழுது இந்த வெள்ளையரின் விலங்கினின்றும் விடுபடுவோமோ வென்று அவரவரும் மனப்புழுக்கத்தால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மேல் நாட்டினரின் நல்ல அரசாங்கமுறையிலும்(?) நியாய பரிபாலனத்திலும்(?) ஒருவருக்கும் இப்பொழுது ஒரு சிறிதும் நம்பிக்கை யில்லை.

மேல் நாட்டு ராஜ்ய பரிபாலன முறையால் கீழ் நாடானது இன்னஇன்ன விதமான பிரயோஜனத்தை யெல்லாம் அடைந்திருக்கிறதென்று சிலாகித்துக்கொண்ட காலமெல்லாம் மலையேறி விட்டது. கீழ் நாடுகளிலுள்ள மேல் நாட்டுக் கொடுங்கோன்மையானது என்றைக்கு அஸ்தமிக்கப் போகிறதோ வென்று ஒவ்வொருவரும் அதிக ஆவலுடன் எதிர் பார்த்திருக்கின்றனர். மேல் நாட்டுக் கல்வியாலும் நாகரிகத்தாலும் எவ்வளவு நன்மை யுண்டென்று முன்னம் கீழ் நாட்டுவாசிகள் நம்பினார்களோ அதைக் காட்டினும் அதிகமான தீமைகளே மிருந்திருக்கின்றன வென்று இப்பொழுதுள்ள மனிதர்கள் நன்குணர்ந்துகொண்டு விட்டார்கள். மேல் நாடானது எவ்வளவுக் கெவ்வளவு கீழ் நாட்டைத் தன்னுடைய கைக்குள் சிக்கவைத்து விடவேண்டுமென்று

இதுவரையில் தந்திரமான சூழ்ச்சியெல்லாம் செய்துவந்த தோ அவ்வளவுக் கவ்வளவு இக்கீழ்நாடானது இப்பொழுது தன்னுடைய கட்டை விடுவித்துக் கொள்ளப் பாடுபடுகின் றது. மேல்நாட்டுக் கல்வியாலும் நாகரிகத்தாலும் அதன் ராஜ்யபரிபாலன முறையாலும் கீழ் நாடானது கற்றுக்கொ ண்ட ஒரு முக்கியமான படிப்பினை யாதெனின், மேல் நாட் டைக் கீழ் நாடானது அடியோடு வெறுக்கக் கற்றுக்கொ ண்டதேயாகும். இதற்கெல்லாம் காரணம் அம் மேல்நாடே யாகும்.

மேல் நாட்டினரின் நடையுடை நாகரிகமெல்லாம் ஒரு புறம் அதிருப்தியையும் அசிகையையும் உண்டுபண்ணின போதிலும் அவர்களின் ராஜாங்கக் கொடுமைதான் இனியில் லாத வெறுப்பையும் திகிலையும் கீழ் நாட்டில் உற்பத்திசெய்து விட்டது. ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு மேல்நாட்டு மனி தர்களுடன் நெருங்கிப் பழகுகின்றாரோ அவ்வளவுக் கவ்வ ளவு அம்மேல் நாட்டினருக்குக் கீழ்நாடு முழுதும் ராஜ்யபரி பாலன விஷயத்தில் அடங்கிக் கிடக்கவேண்டுமென்று அம்மேல் நாட்டினர் கருதுவதை நன்கு தெரிந்து கொள் ளுவார். ஆசியாவும் ஆப்பிரிக்காவும் ஐரோப்பியரின் ஆதிக் கத்தின்கீழ் எப்பொழுதும் படிந்து கிடக்கவேண்டுமென்ப தே அந்த வெள்ளையரின் அபிலாஷையாயிருக்கிறது.

## ஐரோப்பியரை ஆசியர் வெறுக்கும் காரணம்

**ஆனால் ஒரு விஷயம்** மட்டும் மகா நிச்சயமாய்க் காணப்படுகிறது: ஐரோப்பிய ராஜ்ய தந்திரமானது கீழ்நாடு களில் எவ்வளவு காலம் நீண்டிருப்பதாயினும் அஃது இன் னும் எவ்வளவு கம்பீரமாக இருப்பதுபோல் வெளித்

தோற்றத்தில் காணப்படினும் உள்ள நாள் உள்ளமட்டும் அந்தஐரோப்பியரின் ராஜ்யபரிபாலன விஷயமானது மிகவும் சந்தேகாஸ்பதமான ராஜ விசுவாசத்தின் மீது தான் அமர்ந்திருக்கவேண்டியிருக்கிறது. அந்த ஐரோப்பியர்கள் கீழ் நாடுகளில் ஒருபோதும் உண்மையான ராஜவிசுவாசத்தை இனி எதிர்பார்ப்பது முடியாது. இதற்கு இந்த ஐரோப்பியரின் (டயர் ஒட்வியர் போன்ற) நடத்தையே காரணமாயிருக்கிறது. கீழ் நாடுகளில் ராஜ்யபரிபாலனம் புரியச்செல்லும் எந்த ஐரோப்பியரும் அங்குள்ள சுதேசக் குடிகளை உண்மையில் நேசித்து விசுவாசத்துடன் நடத்துவதில்லை. அவர்களையெல்லாம் அடிமைகளாகப் பாவித்து மிருகபலத்தினுல் அடக்கியாண்டு விடலாமென்று கருதுகின்றனர். உண்மையான சகோதரபாவத்துடன் அவர்களையெல்லாம் அந்த ஐரோப்பிய அநாகரிகிகள் நடத்துவதில்லை. வெள்ளையரெல்லாம் ஆளுஞ்சாதியாரென்றும் கருப்பரெல்லாம் ஆளப்பட வேண்டியவரென்றும் இறுமாப்புக் கொண்டு இந்த ஐரோப்பியர் நடக்குமட்டும் உண்மையான ராஜ விசுவாசத்தை இவர்கள் எவ்வாறு இந்தக் கீழ் நாட்டினரிடம் எதிர்பார்ப்பது முடியும்? இந்த ஐரோப்பியர் எப்பொழுதேனும் ஒருசமயம் தங்களுடைய மிருகபலத்தை விட்டு ராஜ்ய தந்திரத்தைக் கையாள உத்தேசிப்பாராயின் ஒரு ஜாதியாரை மற்றொரு ஜாதியாருடன் சிண்டு முடிந்துவிட்டு அவர்களுக் குள்ளிருக்கும் பரஸ்பர ஒற்றுமையைக் கெடுத்துப் "பிரித்து ஆளுதல்" என்னும் ஒரு பேடித்தனமான தந்திரத்தையே கையாளுவார்கள். மேலும் இந்த ஐரோப்பியரிடம் வாக்குச்சுத்தம் என்பது அறவேயில்லை யென்பதையும், வெள்ளையரெல்லாம் கருப்பர்களை ஒழிப்பதற்கே சமயம் பார்த்திருக்கின்றன ரென்பதையும் நம் கீழ்நாட்டு வாசிகள் இப்பொழுது நன்குணர்ந்துகொண்டு விட்டார்கள்.

மேல் நாட்டினரிடம் நல்லெண்ணம் இருந்தாலல்லவோ கீழ் நாட்டினர் அவர்களிடம் அபிமானம் பாராட்டப் போகின்றனர்! மேல் நாட்டினரும் கீழ் நாட்டினரைத் தமது சகோதரர்களாய்ப் பாவிப்பதில்லை; இதனால் கீழ்நாட்டினரும் இம் மேல் நாட்டினரைப் "பரதேசி" களென்றே பாவித்து வருகின்றனர். மேல் நாட்டினரின் வஞ்சகத் தன்மையையும் கொடுங்கோன்மையையும் இப்பொழுது கீழ் நாட்டினர் நன்குணர்ந்து கொண்டார்கள்; இனி அம்மேல் நாட்டுவாசிகள் கீழ்நாட்டினரின் வாயில் கடிவாளத்தைப் போட்டு அவர்களுடைய முதுகில் சவாரி செய்வதென்பது கஷ்ட சாத்தியமான காரியம்தான். கீழ் நாட்டுமக்கள் விழித்துக் கொண்டார்கள்; மேல்நாட்டு மக்களும் விழிக்கின்றனர்!

ஐரோப்பியரின் தறுகண்மையான கொடுங்கோன்மைக்கு ஆசியாவானது எப்பொழுதும் அடிமைப்பட் டிருக்கமாட்டாதென்னும் உண்மையைச் சிலவருஷங்களுக்கு முன்நடந்த ருஷ்யஜப்பானிய யுத்தமானது நன்கு விளக்கிவிட்டது. அதற்குமுன் கீழ் நாடானது மேல்நாட்டுக் கொடுங்கோன்மையின் கீழ் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தையுற்றிருந்தது. ஆனால் அப்பொழுதிருந்த ஐரோப்பிய வல்லாசுகளுள் முதன்மைபெற்றிருந்த ருஷ்யாவானது ஆசியா வாசிகளான ஜப்பானியரிடம் பட்ட உதையின் பின்னர் ஆசியாவிலுள்ள அனைவரும் கண்ணைவிழித்து ஐரோப்பியா ரிடப்பட்ட விலங்கை முறிப்பதற்குரிய வழியும் ஒன்று உண்டென்று உணர ஆரம்பித்தனர். அப்பொழுது ஆசியாவாசிகளைப்போல் ஆபிரிக்கா வாசிகளும் பெருமூச்சுவிட்டுச் சந்தோஷ சாகரத்துள் மூழ்கினர். கருப்பு மனிதர்களின் மனத்தில் வெள்ளையரைப் பற்றிக் குடிகொண்டிருந்த பெருந்திகிலை அந்த ஜப்பானிய வெற்றியானது அடியோ டொழித்துவிட்டது.

ஐரோப்பியரின் ஆதிக்கத்தினின்றும் விடுபடவேண்டு

மென்னும் நல்லெண்ணமானது ஆசியா வாசிகளின் மனத்தில் அதற்கு முன்னரே குடிகொண்டிருந்தது. அப்படிப்பட்ட எண்ணமும் பலிதமாகக் கூடுமென்னும் தைரியமான உணர்ச்சியை அந்த ருஷ்யஜப்பானிய யுத்தமானது நன்கு விளக்கிக் காட்டிவிட்டது. ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் என்றென்றைக்கும் ஆசியாவாசிகளைப் பிணைத்து வைக்கலாமென்னும் எண்ணமானது ஒருபோதும் முடியாதென்னும் உண்மையானது அந்த ஜப்பானியரின் வெற்றியினால் பட்டப் பகல்போல் திட்டமாய் விளங்கிவிட்டது.

இந்த ஜப்பானியரின் வெற்றிக்குப்பின்னுல் ஐரோப்பியர் செய்துவரும் ஒவ்வொரு கொடுங்கோன்மையான செய்கையையும் ஆசியாவாசிகள் ஒவ்வொன்ருக விரல்விட்டு எண்ணிக்கொண்டே வருகிருர்கள். அதற்குமுன், "நம்மால் என்ன செய்யமுடியும்?" என்று சும்மா இருந்த கீழ் நாட்டினர் அந்த 1904-ம் ஆண்டுக்குப் பின் ஐரோப்பியரை ஆசியாவினின்றும் விரட்டவேண்டுவதே தம்முடைய முதற் கடமையென்று தீர்மானம் செய்து கொண்டார்கள். ஆனல் கீழ் நாட்டின் கீழ்க்கோடியானது இவ்வாறு வெற்றிபெற்ற போதிலும் அதன் மேற்கோடியானது ஐரோப்பியரின் ஆதிக்கத்தின்கீழ் அதிகமாக ஒடுங்கத் தலைப்பட்டது. மொராக்கோவானது (மகரிப்) பிரஞ்சுக்காரர் கையில் சிக்கிக் கொண்டது; திரிப்போலியை இத்தாலியர் பிடுங்கிக் கொண்டார்கள்; பல்கான் யுத்தத்தினுல் துருக்கி ராஜ்யமானது சின்னபின்னப் படுத்தப்பட்டது—இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் 1904-க்கும் 1914-க்கும் இடையிலுள்ள இந்தப் பத்து வருஷங்களுக்குள்தான் நிகழ்ந்தன. ஐரோப்பியரின் இப்படிப்பட்ட அடாத அட்டூழியங்களைக் கண்டு முஸ்லிம் உலகமுழுவதும் மும்முரமான மனக்கொதிப்பை அடைய ஆரம்பித்தது. அதனுல் அவர்களுடைய ஆத்திரமும் அளவு

கரைகடந்து பொங்க ஆரம்பித்தது. ஐரோப்பியர்கள் வெறும் பொய்ச்சமாதானங்களை வைத்துக்கொண்டு இஸ்லாமிய தேசங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக ஒழித்து வரும் போது எந்த உண்மையான முஸ்லிமுடைய மனந்தான் புழுக்கத்தால் வேதனை யடையாதென்று நினைக்கின்றீர்கள்?

உலகத்திலுள்ள முஸ்லிம்களெல்லோரும் ஒரே கூட்டத்தினரென்பது இஸ்லாத்தின் மூலக்கொள்கை. ஆதலின் இவ்வுலகின் எந்த மூலையிலுள்ள எந்த முஸ்லிம் ராஜ்யத்துக்கேனும் ஏதேனுமொரு சங்கடம் நேரிட்டால் அதை இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய சொந்தமான துன்பமெனக் கருதுகின்ருர். ஒரு மனிதனுடைய ஓர் உறுப்பில் ஏதேனுமொரு நோய் காணப்படுமாயின் அவனுடைய தேகமுழுதுமே அந்நோயின் வேதனையை அடைவதேபோல் முஸ்லிம் உலகத்தில் சம்பந்தப்பட்ட எந்தராஜ்யத்துக்கு எவ்விதமான துன்பமேதேனும் நேரிடுமாயின் அதனுல் ஒவ்வொரு முஸ்லிமின் மனமும் வேதனையுறுகின்றது. முஸ்லிம்களின் சகோதரத்துவமானது அவர்கள் ஒவ்வோர் ஆண்டிலும் மக்கமாநகர் சென்று செய்து வரும் ஹஜ்ஜு யாத்திரையாலும் இன்னும் அவர்களுடைய கிலாபத் விஷயத்தாலும் அதிகமாக உறுதி பெற்றிருக்கிறது. மேலும் மத்திய ஆபிரிக்காவிலுள்ள **ஸென்னூஸி**கள் என்னும் ஒருவகை முஸ்லிம் கூட்டத்தார்களின் ஒற்றுமையாலும் முஸ்லிம்களின் சகோதர பாவமானது அதிகமாக உறுதிபெற்று வருகிறது. இப்படிப்பட்ட சகோதர வொற்றுமையைக் கெடுத்து மித்திரபேதம் பண்ணி முஸ்லிம்களைச் சின்னபின்னப் படுத்திவிட வேண்டுமென்பதே கிரிஸ்தவ ராஜதந்திரிகளின் அந்தரங்க எண்ணம். இப்படி யெல்லாம் முஸ்லிம்களை ஒடுக்கி இஸ்லாத்தைக் கெடுக்கவேண்டு மென்னும் எண்ணமானது அந்த ஐரோப்

பியக் கள்ளர்களின் மனத்திலிருப்பதால் அதற்குச் சற்றும் இடங் கொடுக்கக்கூடா தென்பதே எம் முஸ்லிம்களின் முக்கிய நோக்கம். முஸ்லிம் உலகமுழுதும் ஒன்றுசேர்ந்து ஜிஹாத் செய்தாவது அந்த ஐரோப்பியரை அடியோடு ஒழிப்பாரல்லாமல் தம்முடைய தீனுல் இஸ்லாத்தை அழிப்பதற்கு அவர்களுக்கு நம்முஸ்லிம் சோதரர்கள் சற்றும் இடங்கொடுத்துக்கொண்டு சும்மா இருக்க மனந்துணியாரென்று யாம் துணிவாகக் கூறுவோம்.

## ஸென்னூஸி இயக்கம்

**முஸ்லிம்களுக்குள்** காணப்படும் இப்படிப்பட்ட உணர்ச்சியானது சென்ற பத்தொன்பதாம் நூற்றூண்டின் மத்திய பாகத்திலிருந்துதான் ஜமாலுத்தீன் ஆப்கானீ என்பவருடைய கிளர்ச்சியாலே உண்டாயிற்றென்று கூறலாம். இவர் இராஜீய சம்பந்தமான கிளர்ச்சிகளையே அங்கங்கே சென்று கிளப்பினூர். இத்தகைய இராஜீய கிளர்ச்சியல்லாமல் மதக் கிளர்ச்சியும் அதே சமயத்தில் மத்திய ஆபிரிக்காவில் தோன்றத்தலைப்பட்டது. மார்க்க சம்பந்தமான ஸூபியா வென்னும் சாதுக்களின் கூட்டமானது அனேக நூற்றூண்டுகளாகவே இவ்விஸ்லாமார்க்கத்தில் இருந்துவருகிறது. ஆனால் அப்பழய கூட்டங்களெல்லாம் உலகசம்பந்தமான காரியங்களில் ஒருபோதும் ஈடுபடுவதில்லை. அவர்கள் தங்களுடைய ஆத்மார்த்தத்துக்குரிய வழியில் மிகுதம் ஈடுபட்டவர்களாய் இவ்வுலக வாழ்க்கையையே ஒருதுரும்பாக மதித்துவந்தார்கள். இப்படிப்பட்ட பல கூட்டங்கள் இக்காலத்திலும் இல்

லாமற் போகவில்லை. ஆனால் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின்மத்தியில் ஸென்னூஸியாவென்னும்ஒருவகைக்கூட்டத்தார்கள் தோன்றினார்கள். கி.பி.1800-ல் அல்ஜீரியா வென்னும் தேசத்தில் முஸ்தகானம் என்னும் ஓர் ஊரில் தோன்றிய ஸையத் முஹம்மத் பின் ஸென்னூஸி என்பவரே இந்த இயக்கத்தை நிலைநாட்டினார். இவர் ஒரு பெயர்வாய்ந்த கண்ணியம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். இவர் அதி பால்யத்திலேயே மதபக்தியிலும் மார்க்கக் கல்வியிலும் அளவுகடந்த சிரத்தையுடையவராயிருந்தார். பெஜ் என்னும் நகரிலிருக்கும் இஸ்லாமிய சர்வகலாசாலையில் மதசம்பந்தமான கல்வியை யெல்லாம் முடித்துக்கொண்டு பிறகு வட ஆபிரிக்கா முழுதும் இஸ்லாத்தில் காணப்படும் தவறான ஒழுக்கங்களைப்பற்றி உபதேசம் புரிந்துவந்தார். இவர் திரு மக்காவுக்கு யாத்திரை சென்றபோது அங்கிருந்த வஹாபி இயக்கத்தின் ஆசிரியர்களுடைய ஊக்கத்தைக் கண்டவுடன் இவருடைய மத சீர்திருத்த ஊக்கமும் பன்மடங்கு மிகுதமாகச் சுடர் விட்டெரியத் தலைப்பட்டது.

இவர் 1843-ஆம் ஆண்டில் வட ஆபிரிக்காவுக்குத் திரும்பிவந்து திரிப்போலியில் தங்கி அங்கே தம்முடைய "ஜாவியாபைதா" என்னும் பெயரையுடைய வெள்ளை ஆசிரமம் ஒன்றை தர்ஞ என்னுமிடத்திற்குச் சமீபத்திலுள்ள மலைகளுக்குள் நிர்மாணித்துவைத்தார். இவருடைய ஆஜானுபாகுவான ஆகிருதியும் கூரிய நுண்ணறிவும் மனிதர்களுடைய மனத்தை மிகுதியும் கவரக்கூடியவையா யிருந்ததனால் வட ஆபிரிக்காவின் எல்லாப்பகுதிகளிலுமிருந்து மனிதர்கள் திரள்திரளாக இந்தப் புதிய இயக்கத்தில் சேர்ந்துவந்தார்கள். இவருடைய அதிகாரத்தையும் ஆண்மையையும் கண்டு அதிசீக்கிரத்தில் திரிப்போலியிலிருந்த துருக்கிய அதிகாரிக ளெல்லோரும் திகில் கொள்ளத்தொடங்கினர்

இவருக்கும் துருக்கிய அரசாங்கத்தினருக்கும் நடந்துவந்த மனஸ்தாபத்தினால் ஸையத் முஹம்மத் உடனே மத்திய ஆபிரிக்காவிலுள்ள லிபியன் மணல்வெளியின் தெற்குக் கோடிக்குச்சென்று அங்குள்ள ஜாபூப் என்னும் வளம் பொருந்திய இடத்துக்குத் தம்முடைய தலைமை ஸ்தானத்தை மாற்றிக்கொண்டுபோய் விட்டார். இவர் 1859-ல் இறந்துபோகும்போது இவருடைய இயக்கமானது வட ஆபிரிக்காவின் பெரும்பாகமான இடங்களில் பரவி விட்டது. இவருடைய பிரசாரமானது இவரது குமாரரான ஸென்னூஸி அல்மஹ்தீ என்பவரால் இடைவிடாமல் மேன் மேலும் செய்யப்பட்டு வந்தது.

இந்த அல்மஹ்தீயானவர் எவ்வாறு பட்டத்துக்கு வந்தாரென்னும் விஷயத்தை நாம் நோட்டமிட்டுப் பார்ப்போமாயின் இவருடைய உத்ஸாகம் எப்படிப்பட்டதென்பது நன்கு விளங்கும்: ஸையத் முஹம்மத் என்பவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்களுள் இளையவரே இந்த அல்மஹ்தீயாவார். அவர்களிருவரும் வாலிபர்களாயிருக்கும்போது அவர்களுடைய மனவுறுதியைப் பரீக்ஷிக்கும்பொருட்டுத் தந்தையானவர் ஒரு விந்தையான கட்டளையிட்டார். அவர் தம்முடைய சிஷ்யவர்க்கங்களெல்லோருடைய முன்னிலையிலும் தம்முடைய புத்திரர் இருவரையும் ஓர் உயரமான பனைமரத்தின்மீது ஏறும்படி உத்தரவிட்டார். அவர்களிருவரும் அவ்வாறு செய்தபின் அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதும் அவனுடைய திருத்தூதரின் மீதும் இருக்கும் நம்பிக்கையானது உண்மையான உறுதியுடையதாயிருப்பின் அங்கிருந்து கீழே குதிக்கவேண்டுமென்று ஆக்ஞையிட்டார். உடனே இளையவர் தாழக்குதித்துத் திட தேகத்துடன் ஒன்றும் ஹானியில்லாமல் எழுந்திருந்தார். மூத்தவரோ மரத்தின்மீதிருந்தபடியே இருந்துவிட்டார்.



181282

"ஆண்டவனுடைய நாட்டத்துக்குத் தன்னை முழுதும் ஒப்புக்கொடுப்பதற்கு அச்சங் கொள்ளாமலிருந்த" அல்மஹ்தீயே பிறகு ஸென்னூஸிகளின் தலைவராக அமர்ந்தார். இவருடைய தந்தையார் எதிர் பார்த்திருந்தபடியே இவர் மதபக்தியும் உலகஞானமும் மிகுந்தவரா யிருந்ததோடு தந்தையாரின் பிரசாரத்தையும் அதிகமாக விருத்திசெய்து வந்தார். இவர் தம்முடைய ஆட்சியின் இறுதிப்பகுதியில் லிபியன் என்னும் மணல் வெளிக்குள் இன்னும் நெடுந்தூரத்திலிருக்கும் ஜௌபென்னு மிடத்திற்குத் தம்முடைய தலைமைஸ்தானத்தை மாற்றிக்கொண்டார். இங்கே அவர் 1902-ல் காலஞ் சென்றுவிட்டார். பிறகு இவருடைய தமையன் குமாரராகிய அஹ்மத் அல்ஷரீப் என்பவர் தலைமை வகித்து இன்றளவும் ஆட்சிபுரிந்து வருகிறார். இவருடைய சாமர்த்தியமும் அதிசாமர்த்தியமாகவே யிருந்து வருகிறது.

எண்பது வருஷத்திய அனுபவத்தையுடைய இந்த ஸென்னூஸி இயக்கமானது இஸ்லாத்தில் காணப்படும் ஒரு முக்கிய ஜீவதாதுபோல் இருந்து வருகிறது. முஸ்லிம் உலகத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் இந்த இயக்கத்தில் சேராத மனிதர்கள் இல்லை. அரபுநாடுமுழுதும் இதைச் சேர்ந்த முஸ்லிம்கள் அளவில்லாமல் காணப்படுகின்றனர். மக்கா, மதீனாவிலும் இவர்களுடைய இயக்கம் பிரசாரம் செய்துவருகின்றது. இஃதேபோல் வடஆபிரிக்காவிலும் ஸென்னூஸி இயக்கமானது நாளுக்குநாள் வலுவடைந்து வருகிறது. மொராக்கோ முதல் ஸோமாலி தேசம்வரையில் ஆபிரிக்காவின் வடபாகம் முழுதும் ஸென்னூஸிகளின் ஜாபியாக்கள் நிரம்பிக்கிடக்கின்றன. முகத்தம் அல்ஸென்னூஸி என்று அழைக்கப் படுகின்ற ஸென்னூஸித் தலைவரின் ஆணைக்கு முழுதும் கட்டுப்பட்டே எல்லா ஆசிரமங்களும் வேலை செய்து வருகின்றன. லிபியன் ஸஹாராவின் நடுமத்தி

யில் ஸென்னூஸியின் முக்கிய ஸ்தலமாகிய ஜௌபென்பது அமைந்திருப்பதனால் இதை யாதோர் ஐரோப்பிய மனிதனும் போய்ப்பார்த்ததில்லை. இந்த ஆசிரமத்தைச் சுற்றி அனேகங் காவதங்கள் வரையில் வறண்ட மணல் வெளிகளே பரந்து கிடக்கின்றன. காததூரத்துக்குக்காத தூரத்தில்தான் ஏதேனுமொரு நீரூற்றுக் காணப்படும். அங்கே செல்லக்கூடிய வழியானது அதற்குமுன் அவ்விடத்துக்குப் போய்வந்துகொண் டிருக்கிற ஸென்னூஸி வழிகாட்டிகளுக்கு மட்டுமேதான் தெரியக்கூடியதாயிருக்கிறது. இப்படிப்பட்ட வழிகாட்டிகள் தங்களுடைய தலையை ஆயிரம்முறை எதிரிகள் கொய்வதாயிருந்த போதிலும் தங்களுடைய குருவாகிய அல்ஸென்னூஸி இருக்குமிடத்திற்குச் செல்லக்கூடிய வழியைக் காட்டமாட்டார்கள். இப்படிப்பட்ட ஏகாந்தமான இடத்தில் அவர் இருந்துகொண்டு தம்முடைய ராஜ்யாதிகாரத்தை எல்லா இடத்துக்கும் அனுப்பிவருகிறார்.

இத்தகைய ஸென்னூஸிகளால் செலுத்தப்படும் அதிகாரமானது அதிக கம்பீரமானதாகவே யிருக்கிறது. ஆங்காங்கேயுள்ள ஜாபியாக்களெல்லாம் வெறும் ஆசிரமங்களென்று மட்டும் கருதவேண்டாம். அங்கங்கேயும் தலைவாாயிருந்துவரும் **முகத்தம்** என்பவரோடு வக்கீல் என்னும் ஒருவகை கவர்னரும் இருந்து வருகிறார். இவர்களுக்கு ஜாபியாவின் அங்கத்தினர் மீது மட்டுமல்லாமல் ஏனைக் குடிகளின்மீதும் அதிகாரம் சென்றுவரும். ஜாபியாவிலிருக்கும் வக்கீலாவது முகத்தமாவது ஏதேனுமோர் உத்தரவைப் பிறப்பித்தால் அவ்வூரிலுள்ள எல்லாமனிதர்களும் அதை அதிக பயபக்தி விசுவாசத்துடன் நிறைவேற்றி வைப்பார்கள். ஆபிரிக்காவில் பிரிட்டிஷாருக்கும் பிரான்ஸியருக்கும் இத்தாலியருக்கும் இன்னும் ஏனைய ஐரோப்பியருக்கும்

ராஜ்யாதிகாரம் சென்று வந்தபோதிலும் இவர்களெல்லோ ரும் அந்த ஸென்னூஸி அதிகாரத்துடன் எதிர்ப்புச் செய் யாமலே அதிஜாக்ரதையாக இருந்துவரவேண்டிய அவசியமி ருக்கிறது. ஆனால் ஸென்னூஸிகளும் ஐரோப்பிய ஆட்சியாரு டன் நேரில் கலகஞ்செய்து கொள்ளாமலே இதுவரையில் இருந்து வருகிறார்கள். ஆனால் இவர்கள் ஐரோப்பியருடன் இன்றளவும் கைகலந்து கொள்ளாமலிருப்பதுதான் அவர்க ளுக்கே ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. எண்பது வரு ஷங்கள்வரையில் இந்த இயக்கமானது நிலைக் கொண்டிருந் தும் இதுவரையில் இஃதொனறும் அதிகமான ஆவேசத்து டன் வெளிக்கிளம்பவில்லை. சென்ற திரிப்போலியுத்தத்திலும் இதைப்போன்ற வேறுசில குழப்பங்களிலும் அங்கங்கே யிருந்த ஸென்னூஸிகள் தலையிட்டது வாஸ்தவமேயாயினும் அக்கூட்டத்தார் முழுதும் ஒருமுறையும் யுத்தசன்னத்த ராய் வெளிக்கிளம்பினதில்லை.

இக்கூட்டத்தார்கள் கிரிஸ்தவ் அரசாங்கத்தாருடன் மட்டுந்தான் எதிர்ப்புச் செய்வதில்லையென்று நினைக்க வேண்டாம்; முஸ்லிம் கிளர்ச்சிக்காரர்களுடனும் இவர்கள் சேர்ந்துகொள்வதில்லை. ஸென்னூஸிக் கூட்டத்தார் எப் பொழுதும் பிரத்தியேகமாகவே யிருந்துவருகிறார்கள். ஆனால் இவருடைய சாந்தகுணத்தைக்கண்டு ஐரோப்பியர் கள் திகில் கொள்ளாமல் மட்டும் இல்லை. இவர்கள் தங்க ளுடைய பிரசாரத்தைமட்டும் இடைவிடாமல் செய்து கொண்டே வருகிறார்கள். இவர்கள் முதன்முதலில் ஆபிரிக் காவிலுள்ள முஸ்லிம்களை யெல்லாம் ஒன்று படுத்திக்கொ ண்டு பிறகு முஸ்லிம் உலகமுழுதையும் ஒன்றாகத்திரட்ட எண்ணியிருக்கிறார்கள். ஒரே கிலாபத்தின் கீழ் முழு உலக மும் அமரவேண்டுமென்பது இவர்களுடைய நோக்கமாயி ருந்து வருகிறது. கிரிஸ்தவர்களுடைய ஆட்சியினின்றும்

கழன்று கொள்வதற்குமுன் முஸ்லிம்கள் தங்களுடைய மதபக்தியை ஒழுங்குசெய்து கொள்ளவேண்டுமென்று இவர்கள் கூறுவார்கள். முஸ்லிம்கள் தங்களுடைய தீய பழக்கவழக்கங்களை யெல்லாம் கைவிட்டு உண்மையான இஸ்லாமிய கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று அதற்கானவழியில் தங்களுடைய கூட்டத்தார்களைப் பழக்கிவருகிறார்கள். வியாபாரம் வியவசாயம் கட்டிடம் கட்டுதல் கிணறு வெட்டுதல் முதலிய தொழில்களையும் விருத்தி செய்து வருகிறார்கள். இதனால்தான் ஸென்னூஸிகள் வெளியுலகத்தாருடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் தங்களுடைய காரியத்தை மட்டும் நாளுக்குநாள் மாதத்துக்குமாதம் மிக நிதானத்துடன் சப்தம் செய்யாமல் விருத்தி செய்துகொண்டே போகின்றனர். இவர்கள் தங்களுடைய பக்குவதிசைக்கு முன் வெளிவரமாட்டார்கள். ஆனால் ஆயிரக்கணக்காக ஜாபியாக்களை வட ஆபிரிக்காவில் ஏற்படுத்துவதுடன் மத்திய ஆபிரிக்காவிலும் தென் ஆபிரிக்காவிலும் இலக்ஷக்கணக்கான நீகிரோவர்களை இஸ்லாத்தில் சேர்த்துவருகிறார்கள். இப்படிப்பட்ட பிரசாரமானது கிரிஸ்தவப் பாதிரிமார்களுக்கு மிகப்பெரிய மனக்கவலையை உண்டு பண்ணியிருக்கிறது. இஸ்லாமார்க்கத்தில் கிரிஸ்தவரைப் போல் ஊதியம் பெற்றுண்டிழைக்கும் பாதிரிமார்கள் இல்லை. ஆனால் இம்மார்க்கத்தில் ஒவ்வொருவரும் மிஷனெரியாகவே இருந்துவருகிறார். சுமார் இருபது வருஷங்களுக்கு முன் ஓர் ஆங்கிலேயர், "ஆபிரிக்காவின் உட்பகுதியில் முஹம்மதிய மதமானது (இஸ்லாம்) ஆச்சரியப்படும்படியான விதத்தில் அபிவிருத்தி யடைந்துகொண்டு வருகிறது. அங்குள்ள மௌட்டீகக் கொள்கைகளை யெல்லாம் இது வேருடன் களைந்து ஒழிக்கிறது; இதற்குமுன்னிலையில் கிரிஸ்தவர்களின் பிரசாரமானது ஒருகட்டுக் கதையைப்

போல் காணப்படுகிறது," என்று கூறியிருக்கிறார். மற்றொருபிரஞ்சுப்பாதிரியார் பின்வருமாறு பிரலாபித்தழுகிறார்: "இஸ்லாமானது மேன்மேலும் விருத்தியடைந்து கொண்டேபோகிறது; சில வேளைகளில் இதன் வேகமானது சிறிது மந்தமாய் விடுவதுண்டு. ஆனால் அறவே ஒருபோதும் ஒழிந்து போவதில்லை. இந்தப்பிரசாரமானது ஆபிரிக்காவின் மத்தியபாக முழுதும் ஊடுருவிச் செல்கிறது. இடையில் என்ன தடைகள் ஏற்பட்டபோதிலும் இஸ்லாம் தன்னுடைய நோக்கத்தை மட்டும் விடாமல் மேல் நோக்கிச் செலுத்திக்கொண்டே யிருக்கிறது. ஒன்றுக்கும் அஃது அஞ்சுவதில்லை. இஸ்லாம் தன்னுடைய வெற்றியில் முழு நம்பிக்கையும் வைத்திருப்பதனால் கிறிஸ்தவமார்க்கத்தைத் தனக்காகவுள்ள ஓர் எதிரியென்று இலக்ஷியம் செய்வதில்லை. ஆபிரிக்காவை வெல்வதற்குக் கிறிஸ்தவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கும்போது முஸ்லிம்கள் அதை முடித்துக் கொண்டு வருகிறார்கள்."

## இஸ்லாமும் தேசீயகக்ஷியும்

**இஸ்லாமார்க்கமானது** இவ்வுலகிலுள்ள எல்லா மனிதர்களுக்குமே பொதுவான மதமென்பது எமது குர்ஆன்ஷரீபின் முதலானகொள்கை. ஆதலின் இம்மார்க்கத்துக்குள் "தேசியம்" என்னும் உட்பிரிவினையானது ஒருபோதும் தன் குறுகிய நோக்கத்துடன் நுழைவது முடியாது. "தேசீயம்" என்பது யாது? இஃது இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு தேசத்தினரும் தத்தம்முடைய தேசமே எல்லா

விஷயத்திலும் சிறந்து முதன்மைபெற்றிருக்கவேண்டுமென்று எண்ணும் தேசாபிமானமன்றோ? எம்முடைய குர்ஆன் ஷரீபின் கட்டளையின் பிரகாரம் இவ்வுலகிலுள்ள எல்லா மனிதர்களும் ஒரே ஜாதியாராகவும், எல்லா நாடுகளும் ஒரே தேசமாகவும் பாவிக்கப்பட்டு வரும்போது இந்த இஸ்லாமார்க்கத்தைத் தழுவியவர்கள் எவ்வாறு தமது ஜனன பூமிமட்டுமே தம்முடைய சொந்த தேசமென்றும் ஏனை நாடுகளெல்லாம் எதிலர் நாடென்றும் கருதுவது கூடும்? “தேசியம்” என்னும் இந்தக் குறுகிய கொள்கையானது ஐரோப்பிய நாட்டில்தான் முதன்முதல் உற்பத்தியாயிற்று. ஐரோப்பிய மேல் நாடுகளில் அந்த அந்த ஜாதியாரும் தத்தம்முடைய தேசம் மட்டுமே சிறந்ததென்று மகா சிலாக்கியமான (?) தேசாபிமானம் பாராட்டிவருகின்றனர். இப்படிப்பட்ட தேசாபிமானமென்னும் “தேசியமே” இப்பொழுது நடந்த ஐரோப்பிய மகாயுத்தத்துக்கு முக்கிய மூலகாரணமாயிருந்தது. இப்படிப்பட்ட தேசீயம் இஸ்லாமார்க்கத்தில் கிடையாது; இத்தகைய தேசிய ஞானமானது ஐரோப்பாவிலிருந்துதான் முஸ்லிம் உலகத்துக்குள்ளும் வந்து சிறிது சிறிதாகப் புகுந்துகொண்டது.

பத்தொன்பதாவது நூற்றூண்டில் ஐரோப்பிய மேல் நாட்டினர் முஸ்லிம் நாடுகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தம்முடைய கொடிய கைவசத்தின்கீழ்க் கொண்டுவரத் தொடங்கிய பின்னரே முஸ்லிம்களும் இப்படிப்பட்ட தேசிய மென்னும் ஜனன தேசாபிமானத்தைக் கற்றுக்கொள்ளத் தலைப்பட்டனர். “பிரித்தாளுதல்” என்னும் மித்திரபேதமே மேல்நாட்டு ராஜதந்திரமா யிருந்து வருவதால் அவர்கள் தம்முடைய துர்க்குணமாகிய பொறாமைக்குணத்தை நம் முஸ்லிம்களிடத்தும் பரத்தச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். அதற்குமுன் முஸ்லிம்கள் எல்லோரும்,

தாம் எத்தேசத்திற் பிறந்தவராயினும் எப்பாஷைக் குரியவராயினும், முஸ்லிம் என்னும் ஒரே வர்க்கத்தையே சேர்ந்தவரென்று கருதிவந்தனர். ஐரோப்பிய வெள்ளையனொருவனைக் கண்டு, "நீ எந்த ஜாதியைச் சேர்ந்தவன்?" என்று வினவுவோமாயின் அவன் அதற்கு மறுமொழியாக, "நான் ஓர் ஆங்கிலேயன்," அல்லது, "நான் ஓர் அமெரிக்கன்," அல்லது, "நானொரு பிரஞ்சுக்காரன்," அல்லது, "நானொரு ஜெர்மானியன்," என்று விடைகொடுப்பான். ஆனால் இதற்குமாருக ஒரு முஸ்லிமைக் கண்டு, "நீர் யார்?" என்று கேட்டால், "நானொரு துருக்கியன்," என்ருவது அல்லது, "நானொரு பட்டான் (பட்டாணி)," என்ருவது அல்லது, "நானோர் இந்தியன்," என்ருவது அல்லது, "நானொரு மிஸ்ர் வாசி, அரபி, பார்ஸி, ஆப்கானி அல்லது மலாய் வாசி" என்ருவது மறுமொழி கூறமாட்டார்; ஆனால் "நானொரு முஸ்லிம்," என்று அழகாக விடைகொடுப்பார்; ஏனெனின், இஸ்லாமார்க்கமானது ஒருதேசத்துக்கு மட்டும் சொந்தமானதன்று. ஒவ்வொரு தேசத்தினரும் தத்தம்முடைய ஜனன தேசத்தை மட்டுமே "தமதுதேசம்" என்று கருதி மற்றை நாட்டை யெல்லாம் மாற்றூர் தேசமெனக் கொள்ள வேண்டு மென்னும் இந்தப் பொருமைக் குணமானது ஐரோப்பிய வெள்ளையர்களாலேயே நம் நாட்டில் நிலைநிறுத்தப்பட்டது.

இதனல் தேசாபிமானமென்பது இஸ்லாத்தில் இல்லையென்று கருதிவிட வேண்டாம். ஒவ்வொரு முஸ்லிமும் தத்தம்முடைய தேசத்தை முழு மனத்துடன் அபிமானிக்க வேண்டுமென்பதே எமது இஸ்லாமிய கட்டளை. ஆனல் ஐரோப்பியர் கூறுவதே போல் நம்முடைய நாட்டையே இவ்வுலகிலுள்ள ஏனை நாடுகளைக் காட்டினும் மேலானதென்று கருதி இக்காரணத்தால் இதரதேசங்களை

யும் அவ்வத் தேசத்திலுள்ள மனிதர்களையும் அவர்களது நடையுடை நாகரிகங்களையும் வெறுக்க வேண்டுமென்று நமது தீனுல் இஸ்லாமானது எங்கேயும் அனுமதிகொடுக்கவில்லை. ஐரோப்பிய நாட்டினரெல்லாம் அவரவரும் தத்தம்முடைய தேசமே மகாசிலாக்கியமானதென்றும், தத்தம்முடைய ஜாதியாரே தமது சகோதரரென்றும் கருதும்போது முஸ்லிம்கள் மட்டும் இவ்வுலகமுழுதும் தமது தேசமென்றும், இங்குள்ள மனிதகோடிகளெல்லாம் தமது சகோதரரென்றும் அபிமானம்பாராட்டிவருகின்றனர். ஐரோப்பிய ஷைத்தான் குறுக்கிடாதவரையில் முஸ்லிம்களின் சகோதர வொற்றுமையானது ஒருசிறிதும் பின்னமடைந்திராது. உதாரணமாக, இப்பொழுதுள்ள துருக்கியரையும் அராபியரையும் கவனியுங்கள்.

நம்முடைய நபிபெருமானாரவர்கள் குர்ஆன் ஷரீபின் ஆதாரத்தின்மீதே தீனுல் இஸ்லாமென்னும் குடியரசுக் கொள்கையை நிலை நிறுத்தினார்கள். இக்கொள்கையின் பிரகாரம் ஒரே தெய்வத்தின் அடியார்களாகிய எல்லா மனிதப்பிறவியும் ஒரே சகோதரத்துவத்தின் கீழேயே ஒன்றித்து வாழ்தல் வேண்டும். குலபாயிராஷிதீன்களான முதல் நான்கு கலீபாக்களுடைய ஆட்சிமுறையிலும் அவர்களுக்குப் பின்வந்த ஏனைகலீபாக்களுடைய காலங்களிலும் இஸ்லாமார்க்கத்தைச் சேர்ந்த எல்லாமுஸ்லிம்களும் தம்மை ஒரே சகோதரகோஷ்டியைச் சார்ந்தவரென்றே கருதிவந்தார்கள். துருக்கி ஸுல்தான்களுடைய கையில் கிலாபத்தானது சென்ற பின்னரும் இப்படிப்பட்ட சகோதரத்துவமே நடைபெற்று வந்தது. காலஞ்சென்ற மாஜிகலீபாவாகிய அப்துல்ஹமீதுகான் (இப்னு அப்துல்மஜீதுகான்) அவர்களும் இவ்வாறே இவ்வுலகத்திய முஸ்லிம்களெல்லாம் ஒரே சகோதர கோஷ்டியைச் சேர்ந்தவரென்றே எண்ணியும்

நடந்தும் வந்தார்கள். அத்துருக்கியர் தம்முடைய துருக்கி தேசத்தை மட்டும் தமது ராஜ்யமாகக் கருதாமல் இவ்வுலகி லுள்ள எல்லா முஸ்லிம்களும் தங்களுடைய சகோதரக்குடி களேயென்று கொண்டாடி வந்ததைக்கண்டு ஐரோப்பா கண்டமுழுதும் திகில்கொண் டிருந்தது; அதனால் அப் துல்ஹமீதுகானைப்பற்றி ஐரோப்பிய வல்லரசுக ளெல் லாம் சிம்மசொப்பனமே கண்டுகொண்டிருந்தன. ஆனால் அந்த கலீபாவை எப்படியேனும் ஒழித்துவிட வேண்டு மென்றே அவர்களனைவரும் சமயம் பார்த்துக் கொண்டி ருந்தனர். அவர்களுடைய எண்ணம் ஒருவாறு பலிப் பதற்கு அனுசரணையாகவே "இளந்துருக்கியர்" என் னும் ஒரு நூதனதேசியக் கக்ஷிக்காரர் கிளம்பினார்கள். இவர்கள் தீனுல் இஸ்லாத்தின் உண்மைக் கருத்தையுண ராமல் துருக்கிதேசமானது துருக்கியருக்கு மட்டுமே சொந் தமாயிருத்தல் வேண்டுமென்னும் "தேசிய" கக்ஷியை உண்டு பண்ணினர். இந்த "இளந்துருக்கிய" ருடைய கருத்துக்கு ஸுல்தான் அப்துல் ஹமீதுகான் இணங்கி வாராததனால் இவ்விளைஞரெல்லாம் ஒன்று சேர்ந்து சதியாலோசனை செ ய்து அந்த கலீபாவைப் பட்டத்தினின்றும் நீக்கிவிட்டனர். ஈதெல்லாம் ஐரோப்பிய "தேசிய" மாகும். இதனால் ஐரோப் பிய வல்லரசுகளெல்லாம் தம்முடைய ஒரு பெரிய பகைவர் ஒழிந்தாரென்று சந்தோஷங் கொண்டாடினார்கள் *. அந்த அப்துல் ஹமீதுகான் அவர்களைப் போலவே ஆபிரிக்காவின் மத்திய பிரதேசத்திலுள்ள ஸென்னூஸிகளின் குருமார்க ளும் இஸ்லாமிய சகோதரத்துவத்தையே போதித்து வரு

* இவ்வாறே என்வர்பாஷா இறந்துவிட்டாரென்று ஒருபொ ய்யான வதந்தி முன் இங்கிலாந்தில் கிளம்பினவுடன், "நம்முடைய சண்டி எதிரி ஒருவன் ஒழிந்தான்," என்று சில ஆங்கிலப்பத்திரிகை கள் குதூகலங் கொண்டு குப்புறக்கவிழ்ந்தன.

கின்றனர். இஸ்லாத்தில் ஐரோப்பிய "தேசியம்" வந்து புகுந்து கொண்டால் அதனால் இதன் சகோதரத்துவத்துக்கே தீமையுண்டாகுமென்று ஸென்னூஸிகள் கருதுகின்றனர்.

ஆயினும் அப்துல் ஹமீதுகான் அவர்களுடைய காலத்தில் துருக்கியிலும் எகிப்திலும் (மிஸ்ர்), அதன் பின்னர் அரபு நாட்டிலும் தேசிய கொள்கையானது மெல்லமெல்ல வந்து நுழைந்து விட்டது. இஸ்லாமிய சகோதரத்துவத்துக்கும் தேசிய கொள்கைக்கும் ஒன்றும் சம்பந்தமில்லாமற் போயினும் ஐரோப்பிய மேல்நாட்டின் கொடுங்கோன்மையினின்றும் விடுபடவேண்டு மென்னும் நல்நோக்கத்துடன் பிறகு முஸ்லிம்கள் தங்களுடைய தேசிய அபிமானத்தையும் மார்க்க அபிமானத்தையும் ஒருவாறு ஒற்றுமைசெய்து தமக்குள் சமாதானம் செய்து கொண்டனர். இதனால் இஸ்லாமிய சகோதரத்துவத்தையும் தேசியத்தையும் ஒன்று சேர்த்து "இஸ்லாமிய சகோதரத்துவ தேசியம்" என்றொரு நவீன கொள்கையை உண்டு பண்ணினர். ஐரோப்பிய சரித்திரம் மட்டும் படித்துள்ள ஆங்கில மாணுக்கர்களுக்கெல்லாம் இந்த "இஸ்லாமிய சகோதரத்துவ தேசியம்" என்னும் சொற்றொடரானது ஒன்றுக்கொன்று முரண்பட்டாற்போற் காணப்படலாம். ஆனால் ஆழ்ந்து நோக்கும் முஸ்லிம்களுக்கு இதிலொன்றும் அசம்பாவிதம் காணப்படமாட்டாது. முஸ்லிம் தேசங்களுக்குள் ஐரோப்பியரின் தேசிய கொள்கை சென்று புகுந்து கொண்டபோதிலும் அஃது அவர்களுடைய இஸ்லாமிய சகோதரத்துவத்தை ஒன்றும் பாதிக்காமல் அதை அதிகம் உறுதிப்படுத்தி விட்டது. ஆதலின் ஓர் இந்திய முஸ்லிமாகட்டும், அல்லது ஓர் எகிப்திய முஸ்லிமாகட்டும், அல்லது ஓர் அராபி முஸ்லிமாகட்டும், அல்லது ஓர் துருக்கி முஸ்லிமாகட்டும், **தேசீயம்** என்னும் பதத்தை உபயோகிக்கும் போதெல்லாம் ஐரோப்

பியர்கள் அப்பதத்தை எந்தவிதமான பொருளில் உபயோகிக்கிறார்களோ அதே விதமான பொருளில் உபயோகிப்பதில்லை. ஆதலின் ஐரோப்பிய தேசிய கொள்கைக்கும் முஸ்லிம் தேசிய கொள்கைக்கும் அதிகமான வித்தியாசமுண்டு.

உதாரணமாக, "தேசாபிமானம்" என்னும் விஷயத்தைக் கவனிப்போம்: முஸ்லிம்களின் அபிப்பிராயப்படி ஒருவன் தேசாபிமானம் பாராட்டவேண்டுமாயின் அவன் அத்தேசத்தில் ஜனனமானவனாயிருக்கவேண்டுமென்பது அவசியமின்று. யாதொரு முஸ்லிமும் வேறு எதேனுமொரு முஸ்லிம் நாட்டுக்குச் சென்று சேர்ந்தபோதிலும் அத்தேசத்தையும் தன்னுடைய சொந்த தேசமாகவே கருதுகிறார். ஓர் இந்திய முஸ்லிம் துருக்கிதேசம் செல்வதாய் வைத்துக்கொள்வோம்; அங்கே சென்றவுடன் அவர் அத்துருக்கி தேசத்தையே தன்னுடைய சொந்தநாடாகக் கருதி அதன்தேசிய இயக்கத்தில் கலந்து அதில் முழுதும் ஈடுபட்டுவிடுவார். "எகிப்தியருக்காக மட்டுந்தான் எகிப்து தேசம்" என்று மிஸ்ர் வாசிகள் கூறுவார்களாயின் அதனால் ஓர் அரபி அங்கே சென்றால் அவர் அந்த மிஸ்ர் முஸ்லிம்களால் அன்னியராகப் பாவிக்கப்படுவாரென்று கருத வேண்டாம். திமிஷ்கிலிருந்தேனும் அல்லது பகுதாதிலிருந்தேனும் ஒரு முஸ்லிம் காஹிரோவில் சென்று தங்குவதாக வைத்துக்கொள்வோம். அவர் உடனே அத்தேசத்திலுள்ள தேசிய இயக்கத்தில் சேர்ந்துகொண்டு அதன் சுயராஜ்யத்துக்காகப் பாடுபடக் கூடாதென்று அவரைத் தடை செய்யக்கூடியது ஒன்றுமேயில்லை. இப்பொழுது நாம் இந்தியாவின் சுயராஜ்யத்துக்காகப் பாடுபடும்போது மலாய்நாட்டிலிருந்து ஒரு முஸ்லிம் இவ்விந்திய நாட்டுக்கு வருவாராயின் அவரும் நம்முடன் சேர்ந்தே நமது தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுழைப்பார். இதன் காரணம் யாதெனின், இவ்வுலகிலுள்ள எல்லா

முஸ்லிம்களும் ஒரே சகோதரத்துவத்தைச் சேர்ந்தவரா யிருந்து ஒரேவிதமான அபிமானமுடையவராய்க் காணப் படுவதுதான். "யாமெல்லாம் ஒரே ஆண்டவனுடைய மக்கள்"என்னும் கொள்கையானது எம்முஸ்லிம்களுடைய மனத்தில் வேரூன்றிக் கிடக்கிறதென்பதற்கு இஃதொன் றே போதுமான சாக்ஷியமா யிருக்கிறது. இவ்வுலகிலுள்ள எல்லா முஸ்லிம் நாடுகளும் சேர்ந்துதான் **தாருல் இஸ்லாம்** (இஸ்லாத்தின் மன்றம்) என்று பெயர் பெற்றிருக்கின்றன. இந்த தாருல் இஸ்லாத்துக்கு ஒவ்வொரு முஸ்லிமும் சொந்தமானவரே; ஆதலின் இந்த தாருல் இஸ்லாமானது இவ்வுலகிலுள்ள எல்லா முஸ்லிம்களுக்கும் சொந்தமா யிருப் பதனுல் அதைக்காப்பாற்ற வேண்டுவதும் அவர்கள் ஒவ் வொருவருக்கும் பொறுப்பாயிருக்கிறது.

இக்காரணத்தால்தான் இவ்வுலகிலுள்ள ஏதேனு மொரு முஸ்லிம் நாட்டுக்கு எவ்விதமான ஒரு சிறு தீங்குநேரி டினும் அதைக் கண்டு வேற்று நாடுகளிலுள்ள வெவ்வேறு முஸ்லிமும் தனக்கு அவ்விஷயத்தில் ஒன்றும் நேரான லௌ கிகசம்பந்தமில்லாமற் போயினும் அதற்காக அனுதாபப்ப ட்டு மனவருத்த முறுகிறுர். இப்படிப்பட்ட சகோதரத்துவத் தால்தான் ஸெவேர்ஸ் (ஸெவ்ரே) உடன்படிக்கையில் துருக் கிராஜ்யமானது துண்டிக்கப்பட்டுப் போனதைக்கண்டு இவ் வுலகின்கண் ணுள்ள எல்லா முஸ்லிம்களும் ஆத்திரப்பட்ட னர். இப்படிப்பட்ட சகோதரத்துவத்தை உறுதிப்படுத்து வதற்காகவே எமது இஸ்லாமார்க்கத்தில் ஹஜ்ஜும் கிலாபத் தும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனுல்தான் இந்திய முஸ்லிம்களும் கிலாபத்துக்காகப் பாடுபட்டு இவ்வளவு அவ ஸ்தைப்படுகின்றனர்; இவர்கள்பால் வைத்துள்ள சகோதர த்துவ உணர்ச்சியினுல் 24 கோடி ஹிந்துக்களும நம் 8 கோடி இந்திய முஸ்லிம்களுக்குப் பக்கபலமாயிருந்து உதவி

புரிந்து வருகின்றனர். இப்படிப்பட்ட சகோதரத்துவ உணர்ச்சியே முஸ்தபாகமாலின் வெற்றியைக்கண்டு இவ்வுலகமுழுதும் குதூகலங்கொள்ளும்படி செய்து விட்டது. இவரது வெற்றியே பழய உடன்படிக்கையை மாற்றி லாஸேனில் வேறு புதிய உடன்படிக்கையை அமைக்கும்படி செய்து விட்டது. இவரது வெற்றியே அங்கோராவில் குடியரசை நிலைக்கச் செய்தது. இன்னும் இவரது வெற்றியே இஸ்லாத்துக்கும் கிலாபத்துக்கும் சற்றுமுன்வரை பெருமையையும் கௌரவத்தையும் கொண்டு வந்திருந்தது.

இப்பொழுது நாம் "இஸ்லாமிய சகோதரத்துவ தேசியம்" இன்னதென்று செவ்வனே தெரிந்துகொண்டோம். இஸ்லாமிய "தாருல் இஸ்லாம்" என்னும் அபிமானத்துடன் "தேசியம்" என்னும் அபிமானத்தைச் சேர்த்து "இஸ்லாமிய சகோதரத்துவ தேசியம்" என்னும் நவீன தேசிய இயக்கத்தை நம் முஸ்லிம்கள் கண்டுபிடித்தார்கள். இப்படிப்பட்ட நூதன கொள்கையானது இன்னும் சரியானபடி அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து, செவ்வனே பரீக்ஷித்துப் பார்க்கப்பட வில்லையாயினும் இனிமேல் இப்படிப்பட்ட நவீன தேசிய இயக்கத்தினால் தீனுல் இஸ்லாத்துக்கு இனியில்லா முன்னேற்றம் உண்டாகக் கூடுமென்று எல்லா முஸ்லிம் தேசிய ஞானிகளும் முன்னறிக்கை செய்கின்றனர்.

## சென்ற மகாயுத்தத்தின் பலாபலன்

**1914ம் ஆண்டுக்கு** முன்னரே அதிகம் கொதிப்படைந்திருந்த முஸ்லிம் உலகத்தை இந்த ஐரோப்பிய மகாயுத்தமானது மிகுதமாகக் கிளர்ச்சி செய்துவிட்டது. எரிகிற

கொள்ளியை எறத் தள்ளியதுபோல் இந்த மகாயுத்தம் வந்து மூண்டுகொண்டது. ஜெர்மானியருடன் துருக்கியர் சேர்ந்துகொண்டவுடன் இவ்வுலகத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் துருக்கி சுல்தானுடன் சேர்ந்து கொள்ளுவார்களோ வென்று நேசதேசத்தினர் மிகுதியும் திகில் கொண்டிருந்தார்கள்; ஆனால் அப்பொழுதிருந்த ஆங்கில முதல் மந்திரியாகிய லாயிட்ஜார்ஜ் தன்னுடைய பித்தலாட்டமான புனை சுருட்டு உறுதிமொழிகளால் இந்திய முஸ்லிம்களனை வரையும் கண்பொத்திவிட்டார். இவரது சூழ்ச்சியால் எவ்வாறு நாமெல்லாம் எமாந்து போனோ மென்பது உங்களுக்கு நன்கு தெரிந்த விஷயமன்றோ? ஆனால் இந்த மகாயுத்தத்தில் ஐரோப்பிய அகம்பாவமெல்லாம் அதிகமாக ஒழியுமென்று முஸ்லிம் உலகமுழுதும் எதிபார்த்திருந்தது போலவே இப்பொழுது அம் மேல்நாட்டினரின் உள்வயணத்தை நாம் செவ்வனே தெரிந்து கொண்டு விட்டோம்.

யுத்தம் முடிந்து சமாதானமானபின், அதற்குமுன் துருக்கி யருக்கும் அராபியருக்கும் ஆங்கிலேயரால் அளிக்கப்பட்டிருந்த வாக்குறுதியின் பயனாக எதேனும் இஸ்லாத்துக்கு நல்லகாலம் உதிக்கக்கூடுமென்று இந்துமுஸ்லிம்களனைவரும் அதிக எக்கத்துடன் எதிர்பார்த்திருந்தார்கள்; ஆனால், அந்தோ! யுத்தம் முடிந்து நேசக்கக்ஷியினரும் வெற்றிபெற்றபின் முஸ்லிம்கள் மேல்நாட்டினரின் சில சதியாலோசனையான சூழ்ச்சிகளை யெல்லாம் செவ்வனே தெரிந்து கொண்டார்கள். இஸ்லாத்துக்கும் கிலாபத்துக்கும் அளவு கடந்த உதவிகளைப் புரிவதாக நேச தேசத்தினர் பகிரங்கமாகப் பறைசாற்றிக் கொண்டிருந்த அந்த யுத்தகாலத்திலேயே அவர்கள் இஸ்லாமிய ராஜ்யங்களை யெல்லாம் தங்களுக்குள் இரகசியமாகப் பங்குபோட்டுவிதாசாரம் செய்து கொண்டிருந்தார்களென்று நம் முஸ்லிம் தலைவர்கள் நன்கு

தெரிந்துகொண்டார்கள். யுத்தசமாதானத்துக்குப்பின் செய்துகொண்ட பகிரங்க உடன் படிக்கையானது காகிதத்தில் மட்டும் வெறும் எழுத்தாக இருந்ததல்லாமல் உண்மையில் அம்மேல்நாட்டினர், தங்களுடைய இரகசிய ஏற்பாட்டின் படியே சமீப கிழக்குப் பிரதேசங்களையும் மத்திய கிழக்குப் பிரதேசங்களையும் தங்கள் கைவசப்படுத்திக்கொள்ளத் தலைப் பட்டனர். வாயால் செய்த தாராளஉறுதிமொழிகளெல்லாம் வாயுவாகப் பறந்து விட்டன. ஏன் அவர்கள் செய்த உறுதி மொழிகளை நிறைவேற்றிக் கொடுப்பதில்லையென்று வினவினல் அஃதெல்லாம் ராஜ்யதந்திரமென்று விடை பகர்கின்றனர். சமயோசிதம்போல் பேசிவிட்டுப் பிறகு பித்தலாட்டம் செய்வதுதான் மேல் நாட்டில் முதன்மைபெற்ற ராஜ்ய தந்திரமாகக் கருதப்பட்டு வருகின்றது.

1914-க்கு முன் செய்து வந்ததுபோல் முஸ்லிம்கள் தங்களுடைய கோபாவேசத்தினல் சிறுசிறு வெறுங் கிளர்ச்சிகளை மட்டும் செய்துவந்தார்களென்று எண்ணிவிட வேண்டாம். மேல்நாட்டினரின் சமய சூழ்ச்சியைக் கண்டுகொண்ட முஸ்லிம் உலகமுழுதும் ஒரேவிதமான பெருங் கொந்தளிப்பை அடைந்து விட்டது; பகிரங்கமான கிளர்ச்சிகளும் பலமான கலகங்களும் ஆங்காங்கும் நடக்க ஆரம்பித்து விட்டன. எகிப்திலும் அரபுநாட்டிலும் அடக்கமுடியாத பெரும்போரெல்லாம் மூண்டுகொண்டன; சின்ன ஆசியாவில் முஸ்தபா கமால்பாஷா ஸெவ்ரே உடன்படிக்கையில் தமக்கேற்பட்ட மனவேதனையின் காரணமாகத் தம்முடைய அங்கோரா ஆட்சியை நிலைநிறுத்தினர். கமால் கக்ஷியினர் அந்த அக்கிரமமான கிரேக்கரைத் தூரத்தியடித்து ஸ்மிர்ணவைக் கைப்பற்றியிராவிடின் இன்றளவும் இஸ்லாத்தின் கதி என்னவா யிருக்குமென்று யாராலும் சொல்லமுடியாது. இவரது வெற்றிக்குப்பின்னரே லாஸேன்கான்பரன்ஸ் ஒருவாறு

திருப்திகரமாக முடிவடைந்திருக்கிறது. அராபியரிடத்திலோ ஆங்கிலேயர்கள் பற்பலவிதமான சிநேகபாவங்களைக் காட்டிவருகின்றனர். ஆனால் அராபியர் இவ்விஷயத்தில் எவ்வளவு தூரம் ஏமாற்றமடையப்போகிறார்களென்பது மட்டும் பின்னர்தான் தெரியவரும். எகிப்தியரோ ஒருவாறு சிலநிபந்தனைகட்குட்பட்டுச்சுயேச்சை யடைந்து விட்டார்கள். திரிப்போலியிலும் மொராக்கோவிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டு இத்தாலிய அதிகாரிகளையும் ஸ்பானிய அதிகாரிகளையும் அந்நாட்டினர் சமுத்திரக்கரை வரையில் விரட்டிவிட்டார்கள். இந்தியாவிலோ கிலாபத்கிளர்ச்சியும் சுயராஜ்ய முழக்கமும் வெகு மும்முரமாக முழங்கத்தொடங்கிவிட்டன. இதனாலெல்லாம் கீழ்நாடுமுழுதும் ஒரு தடுக்கமுடியாத பெருங்குழப்பம் விளைந்துவிடுமோ வென்று மேல்நாட்டினர் உண்மையாகவே அஞ்சத்தொடங்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிகிலின் காரணமாக ஸெவ்ரே உடன்படிக்கையைத் திருத்தியமைக்கும் பொருட்டுக்கூடிய மொதானியா கான்பரன்ஸும் லாஸேன் கான்பரன்ஸும் பலமாதங்கள்வரை ஒருவிதமான முடிவையும் கொண்டுவரவில்லை. ஆனால் பிரான்ஸுக்காரர்கள் மட்டும் துருக்கியரிடம் மிகுதமான அனுதாபம் காட்டிவந்தனர். இந்தியாவிலோ ஆங்கிலேயர்கள் ஹிந்து முஸ்லிம்களுக்கு ஒருவிதமான திருப்தியைச் செய்யப் பார்க்கின்றனர்; ஆனால் கிலாபத் விஷயமும் இந்திய சுயராஜ்ய விஷயமும் ஒருவித திருப்திகரமான முடிவுக்கு வந்தாலொழிய இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எவ்விதமான சமாதானமும் உண்டாகாதென்பது திண்ணம்.

## ஐரோப்பாவுடன் சகவாசம்

**அமுதபிள்ளைக்கு** வாழைப்பழம் காட்டுவதுபோல் இவ்வாறு இந்தியாவிலுள்ள ஹிந்து முஸ்லிம்களை நம்மை ஆளும் ஜாதியார் ஏமாற்றப்பார்ப்பதால் ஒன்றும் பயன் விளையமாட்டாது. இந்தியர்களும் இன்னும் இதரதேசங்களிலுள்ள முஸ்லிம்களும் அந்த ஐரோப்பியரின் வாக்குச் சுத்தமற்ற "வாக்குறுதி" களின் தாத்பரியம் இன்னதென்பதைச் செவ்வனே தெரிந்துகொண்டு விட்டார்கள். இப்பொழுது இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் சீர்திருத்தத்தின் அந்தரங்க நோக்கம் இன்னதென்பதை மாஜி முதல் மந்திரியான லாயிட்ஜார்ஜ் என்பவர் மாஞ்செஸ்டரில் செய்த பிரசங்கத்திலிருந்து நாம் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறோம். இப்போது இந்திய சட்டசபைகளில் நடைபெற்றுவரும் விஷயங்களை நோக்கும்போதும் இந்தச் சீர்திருத்தமானது ஒரு வெறும் பேய்ச்சுரையின் கூடென்று நன்கு தெரிந்து கொள்ளுகிறோம். ஐரோப்பியரிடத்தில் நம் கீழ்நாட்டு வாசிகளுக்கிருந்த நம்பிக்கையானது அடியோடு போய்விட்டதென்பதை அந்த மேல்நாட்டு வாசிகளே தெரிந்துகொண்டு விட்டார்கள். ஐரோப்பாவின் இரகசியமெல்லாம் இவ்வளவுதானென்பதும் சென்ற மகா யுத்தத்துக்குப்பின் பட்டம்பகல்போல் திட்டமாய் விளங்கிவிட்டது. ஐரோப்பாவிலிருந்த ஐசுவரியக் குவியல் மட்டுந்தான் அந்த மகாயுத்தத்தில் ஒழிந்துபோயிருக்கிறதென்று எண்ணிவிட வேண்டாம்; ஆனால் அம்மேல்நாடுகளிலுள்ள வெள்ளையர்களின் குணாதிசயங்களும் நடவடிக்கைகளுங்கூட மிக மோசமான நிலைமைக்குவந்திருக்கின்றன. ஐரோப்பாவைப் பற்றி அந்த மகாயுத்தத்துக்கு

முன் ஆசியாவாசிகளும் ஆபிரிக்கா வாசிகளும் கொண்டிருந்த "தளுக்கான" அபிப்பிராயங்களெல்லாம் இப்பொழுது நேர்முரணாக மாறுபட்டுவிட்டன. இந்த யுத்தமானது நமக்கெல்லாம் ஒரு பேராசிரியனாயிருந்திருக்கிறது. இப்பொழுதுதான் கீழ் நாட்டு வாசிகளின் கண்கள் நன்றாகத் திறக்கப்பட்டிருக்கின்றன.

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள சாதாரண மனிதர்களையெல்லாம் அந்த ஐரோப்பியர்கள் தங்களுடைய யுத்தப் படையில் சேர்த்துக்கொண்டு தங்களைப்போன்ற வெள்ளையருடன் போர்புரியும் பொருட்டுத் தங்கள் தேசத்துக்கு அழைத்துச் சென்றார்கள். சுமார் பத்துலக்ஷத்துக்கு மேற்பட்ட படிப்பில்லாக் கருப்புமனிதர்கள் அந்த ஐரோப்பிய வெள்ளையருடன் நேர்முகமாய் நின்று யுத்தம் செய்தார்கள். அங்குச்சென்ற ஆசியர்களும் ஆபிரிக்கர்களும் தாங்கள் அதுவரையில் தெய்வமாக மதித்திருந்த வெள்ளையரைத் தங்கள் கையால் கொன்றார்கள்; அவர்களுடைய மேல் நாட்டு நாகரிகமென்பது இன்னதெனச் சிறிது சுவையும் பார்த்தார்கள்; அவர்களுடைய குணதோஷங்களையும் இன்னவையென்று நன்குதெரிந்து கொண்டார்கள்; இன்னும் அவர்களுடைய வெள்ளைப் பெண்களையும் பலவந்தமாகத் துராகிர்தம் செய்து அதையும் அனுபவித்துப் பார்த்தார்கள். கீழ்நாட்டு மனிதர்கள் அந்த ஐரோப்பியமேல்நாட்டில் இவ்வளவும் செய்துவிட்டு இந்தக்கதையை யெல்லாம் சொல்லும் பொருட்டுத் தங்கள் சுதேசத்துக்கும் திரும்பி வந்து விட்டார்கள். ஐரோப்பாவானது ஆசியாவின்மீதும் ஆபிரிக்காவின்மீதும் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது முதல்இன்றளவும் அவர்களுடைய உள்வயணமான "ஊழல்களை"ப் பற்றி இவ்வளவு நன்றாக வேறு எந்தக்காலத்திலும் நாம் தெரிந்து கொண்டதில்லை. அந்த ஐரோப்பாவைப் பற்றி

ஆசியாவும் ஆபிரிக்காவும் சுயமே அனுபவித்துத் தெரிந்து கொண்டிருக்கும் இந்த அரியஞானத்தை எளிதில் மறந்து விடமாட்டா. ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஒன்று படுத்தி அதில் சமாதானமானது நிலைத்திருக்கும்படி செய்த தற்குக் காரணபூதமா யிருந்ததென்று பறைசாற்றப்படும் பிரக்கியாதியான வேர்சைல் "சமாதான" மானது உண்மை யில் ஒருவித சமாதானத்தையும் செய்யவில்லை யென்றும். ஆனால் அது ஐரோப்பாவைப் பிளவுபடுத்தக் கூடியதும், ராஜ்ய தந்திரத்துக்கு மாறுனதுமான ஒரு பிரயோஜனமற்ற காரியமென்றும் இவ்வுலகத்தாரெல்லாம் நன்கு தெரிந்து கொண்டு விட்டனர். இந்தப் போலிச் "சமாதான"த்தால் பழய புண்களெல்லாம் ஆறுமற்போனதோடு புதிய புண் களும் அதிகமாய்க் கிளைத்துவிட்டன. தற்போது ஐரோப் பாவானது அதிகமான ரணத்துடன் பலஹீன மடைந்து பாயோடு கிடக்கின்றது. இதை ஆசியாவாசிகளும் ஆபிரிக் கா வாசிகளும் அறிந்துகொள்ளாமலில்லை. 'எழுந்தால் விட மாட்டேன்' என்று சொல்லும் முடவனுடைய செய்கை போலிருக்கிறது ஐரோப்பாவின் தற்காலப் பரிதாப நிலையா னது.

ஐரோப்பாவானது இப்படிப்பட்ட நிலைமையில் எழுந்து நடக்க முடியாமலிருக்கும்போது ருஷ்யாவிலுள்ள போல்ஷ் விஸ் மானது இவ்வுலக நாகரிகத்தையே பயமுறுத்தத் தலைப் பட்டு விட்டது. போல்ஷ்விஸ்ட் கக்ஷியாரின் கொள்கையா னது கீழ் நாடுகளில் எவ்வளவு தூரம் புகுந்து பொறை யோடி யிருக்கிறதென்று மேல்நாட்டு வாசிகள் இன்னும் செவ்வனே உணர்ந்து கொள்ளவில்லை. ராஜீய சம்பந்தமாக மட்டுந்தான் போல்ஷ்விஸ்ட்கொள்கையானது கீழ்நாடுகளில் பரவியிருப்பதாக அவர்கள் ஸ்தூலமாய் நம்பியிருக்கிறுர்கள்; ஆனால் சென்ற அரை நூற்றுண்டாகவே ஐரோப்பாவின்

ஆதிக்கத்துக்குட்பட் டிருக்கும் ஆசியாவிலும் ஆபிரிக்காவி லும் எவ்வளவு மனக்கொதிப்பு உண்டாயிருக்கிற தென்ப தை உள்ளபடியே உணர்ந்து கொண்டவர்கள் அந்த போல் ஷ்விஸ்ட் கக்ஷியின் கொள்கையானது கீழ்நாடுகளில் எவ்வ ளவு மனத்திருப்தியுடன் ஆமோதிக்கப்பட்டிருக்குமென்ப தைச் செவ்வனே அறிந்து கொள்ளக்கூடும். ஐரோப்பியர் கள் ஆசியாவிலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் ஒவ்வோர் ஆண்டிலும் கொள்ளைகொண்டு செல்லும் கோடானுகோ டிப் பவுன்களினால் நம் கீழ் நாடானது 1914-க்கு முன்ன ரே மிக்க வறுமைக்குள் ஆழ்ந்து விட்டது; அதன்பின் வந்த இந்த மகா யுத்தமானது இன்னும் அதிகமாக நம் கீழ் நாடுகளை யெல்லாம் தாரித்திரதிசை யென்னும் பாதாளத் துக்குள் அழுத்திவிட்டது. ராஜீய சம்பந்தமான குழப்பங்க ளெல்லாம் ஒரு புறமிருந்த போதிலும் இந்த வறுமையினால் உண்டாயிருக்கும் மற்றக் கேடுகளையும் ஓர் உறையிட்டுச் சொல்லல் முடியாது. கீழ் நாடுகளின் வறுமையானது நீங்கி இங்குள்ள வியாபார மெல்லாம் முன்னிருந்த க்ஷேமமான நிலைக்கு வருவதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லு மென்று யாராலும் கணித்துச்சொல்ல முடியவில்லை.

## ருஷ்யாவின் நோக்கம்

**ஐரோப்பா கண்டத்தில்** இதுவரையில் விருத்தி யடைந்து வந்திருக்கும் மேல்நாட்டு நாகரிகத்தை யெல்லாம் அடியோடொழித்து அங்குள்ள ஐசுவரியவான்களையும் அஷ்டதரித்திரர்களையும் ஒருசமமாக நிரவல் செய்யவேண்டு

மென்பதுதான் அந்த ருஷ்யபோல்ஷ்விஸ்ட் கக்ஷியாரின் முக்கிய நோக்கமாயிருந்து வருகிறது. அவர்கள் ஆரம்பத்தில் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலு முள்ள மனிதர்களின் அதிருப்தியை யெல்லாம் தங்களுடைய கக்ஷிக்கு அனுசரணையாக எற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். அதிகம் அதிருப்தியடைந்திருக்கும் ஆசியர்களையும் ஆபிரிக்கர்களையும் தங்களுடைய கக்ஷியில் சேர்த்து அவர்களுக்கு உற்சாகத்தை மூட்டிவிட்டால் ருஷ்யாவில் கிளம்பிய ஸோவித் அரசுநிலை யானது உலகமுழுதையும் குழப்பத்தில் ஆழ்த்தி மேல் நாட்டு நாகரிகத்தையும் ஒருவாறு ஒழித்துவிடுமென்று அந்தரங்கத்தில் எண்ணியிருக்கிறார்கள்.

ஆதலின் 1917-ம் ஆண்டின் இறுதியில் ஸோவித் அரசாங்கம் நிலை நிறுத்தப்பட்டவுடன் கீழ் நாடுகளிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்கிலும் போல்ஷ்விஸக் கொள்கைகளைப் புகுத்துவதற்கு வேண்டிய பெரும் பெரும் எற்பாடுகளையெல்லாம் அவர்கள் ஆரம்பம் செய்யத் தொடங்கினர். கீழ்நாட்டு மனிதர்களின் மனத்திலுள்ள ஒவ்வொரு விதமான அருசியையும் அதிருப்தியும் அந்த ருஷ்யர்களால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஸோவித் கக்ஷியாரின் முக்கிய கொள்கையானது கீழ் நாட்டின்மீது மேல் நாட்டினருக்கிருக்கும் ஆதிக்கத்தை ஒழித்து அவர்களுடைய கொள்ளைத் தொழிலையும் தடுக்கவேண்டியதா யிருத்தலினால் "இஸ்லாமிய சகோதரத்துவ தேசிய கக்ஷியாரும்" அந்த மேல் நாட்டு ஐரோப்பியரின் அதிக்கிரமத்தை ஒழிப்பதற்காக அந்த ருஷ்யருடன் சேர்ந்துகொள்ளப் பார்த்தனர். இஸ்லாமார்க்கத்துக்கும் போல்ஷ்விஸக் கொள்கைக்கும் ஒன்றும் சம்பந்தமில்லாமற் போயினும் இஸ்லாமிய சகோதரத்துவத்தார் அந்த ருஷ்யாவின் பக்கமே உதவிக்கு நோக்கிய வண்ணமா யிருந்தனர்.

நம் தீனுல் இஸ்லாமென்னும் சத்திய சன்மார்க்கத்தில் போல்ஷ்விஸத்தின் கொள்கைகள் அங்கீகரிக்கப்பட்டிருப்ப தாகச் சிலர் தவருக எண்ணுகின்றனர். போல்ஷ்விஸ்மா னது ஒருவருக்கும் பிரத்தியேகமான சொந்தச் சொத்து இருக்கக்கூடாதென்றும், பணக்காரர்கள் ஏழைகள் என் னும் வித்தியாசம் ஒன்றும் இருக்கக் கூடாதென்றும், தேச த்திலுள்ள எல்லாச் சொத்தும் ராஜாங்கத்தையே சேர்ந்த தாயிருக்கவேண்டுமென்றும், அதினின்றும் ஒவ்வொருவ ரும் சம்பளம் பெற்றுக்கொண்டு ஊழியம் செய்யவேண்டு மென்றும் அக்கக்ஷிக்காரர் கூறிவருகின்றனர். ஆனல் இஸ் லாமார்க்கமானது இப்படிப்பட்ட போல்ஷ்விஸ்ட் கொள் கைகளை ஒப்புக் கொள்ளவில்லை. மனிதர்களெல்லோரும் ஒரே சகோதரத்துவத்தைச் சேர்ந்தவர்களென்றும் அவர்க ளுக்குள் லௌகிக வைதிக காரியங்களில் மேன்மை தாழ் மையென்னும் வித்தியாசம் இருக்கக் கூடாதென்றும் தீனுல் இஸ்லாமானது முறையிடுகின்றது வாஸ்தவமேயாயினும், அவரவரும் சுயமே சம்பாதித்த தம்முடைய சொத்தைச் சொந்தமாக அனுபவிக்கக்கூடாதென்று யாதொருவிதமான சட்டமும் ஏற்பட்டில்லை. ஒவ்வொருவரும் தம்முடைய சொத்தைத் தாமே சுயத்தில் அனுபவித்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட சுதந்தரம் இஸ்லாமார்க்கத்தில் ஸ்திரீகளுக் கும் கொடுக்கப் பட்டிருக்கிறது. பெண்களுடைய சொத் தைப் புருஷர்களும் அபகரித்துக் கொள்ளுவதற்கு வழி யில்லை. இஸ்லாத்தின் ஆசார முறைமை இவ்வாறிருந்த போதிலும் ஐரோப்பியரின் அதிக்கிரமமான குறும்பை ஒழிப்பதற்கு முஸ்லிம்களுள் பலர் அந்த ருஷ்யாவின் உத வியை நாடியவராய்க் காணப்படுகின்றனர்.

கீழ்நாடுகளில் ருஷ்யர்கள் தங்களுடைய போல்ஷ்வி ஸக்கொள்கையைப் பரத்த முயல்வதில் அவர்களுக்கு இர

ண்டு விதமான நோக்கங்களிலிருக்கின்றன: ஒன்று, கீழ்நாடுகளில் மேல்நாட்டினர் வகித்து வரும் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பது; இதுதான் பிரத்தியக்ஷமான நோக்கம். இரண்டு, அவர்களுடைய தூரதிருஷ்டியில் இருந்து வருகின்ற மற்றொரு நோக்கமாகும்; நம் கீழ்நாடுகளிலுள்ள பணக்காரன் ஏழையென்னும் வித்தியாசத்தையும் ஜாதி வேற்றுமை யென்னும் பாகுபாட்டையும் தங்களுடைய ருஷ்யாதேசத்தில் ஒழித்துவிட்டதேபோல் ஒழித்துவிடப் பார்க்கின்றனர். முதலாளி தொழிலாளி என்னும் பாகுபாடே இவ்வுலகில் ஒருசிறிதும் இருக்கக்கூடா தென்பதே அந்த ருஷ்யர்களின் கக்ஷியாயிருக்கிறது. ஐரோப்பியரிடத்தில்கொண்ட வெறுப்பினுல் இதுவரையில் காக்கேசியா, ஆர்மீனியா, குர்திஸ்தான் முதலிய இடங்களில் போல்ஷ்விஸ்ட் ராஜ்யமானது நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் மேற்குலமென்பதும் மத்தியகுலமென்பதும் அழிக்கப்பட்டு, எல்லோரும் சமமான சகோதரத்துவ ஸமரஸபாவத்துக்கே ஒடுக்கப்பட்டு விட்டார்கள்.

ஐரோப்பியரின் குறும்பை ஒழிப்பதற்காகப் பலர் அந்த ருஷ்யாவின் பக்கம் திரும்பிய போதிலும் போல்ஷ்விஸத்தினுல் விளையக் கூடிய தீமைகளையும் பற்பல தேசங்களிலுமுள்ள முஸ்லிம் தலைவர்கள் தங்கள் உள்ளெண்ணத்தில் உணர்ந்து கொள்ளாமலில்லை. "பிள்ளையார்ப் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்த கதைபோல்" ஐரோப்பிய ஆதிக்கத்தை ஒழிக்கும் பொருட்டு ருஷ்யாவிடம் உதவி தேடினுல் அவர்களுடைய போல்ஷ்விஸ்மானது வந்து இஸ்லாமிய நாகரிகத்தையே ஒழித்து விடுமோவென்று ஒவ்வொருவரும் அஞ்சவேண்டியிருக்கிறது. ஸோவித் ருஷ்யாவானது இப்பொழுதிருந்து வரும் அபாயகரமான நிலைமையை நோக்கும் போது கீழ்நாட்டு வாசிகள் ஒருபுறம் அச்சங் கொள்

ளுகிறூர்கள்; மற்ருெரு புறம் மேல்நாட்டாரின் ஆதிக்கத்தைக் கண்டும் வெறுப்புடன் பயப்பட வேண்டியிருக்கிறது. ருஷ்யாவிலோ ஒருசிறு மனிதர்கள் தங்களுடைய சொந்த சாமார்த்தியத்தால் அத்தேசத்து ஜனங்கள் முழுதையும் தங்களுடைய கையின்கீழ் அடக்கிவைத் திருக்கின்றனர். அவர்களுக் கெல்லாம் ராஜீயவிஷயம் இன்னதென்பது கிஞ்சித்தும் தெரியமாட்டாது. அவர்களனைவரும் "இராவணன் ஆண்டாலென்ன? இராமன் ஆண்டாலென்ன?" என்னும் அலக்ஷிய புத்தியுடனேயே காலங்கழித்து வருகின்றனர். இவ்வாறே கீழ் நாடுகளிலும் ராஜீய விஷயங்களில் பெரும் பான்மையோர் அலக்ஷிய புத்தியுடனேயே காலங்கழித்து வருகின்றனர்.

இதனுல்தான் முஸ்லிம் தேசத்துத் தலைவர்களெல்லாம் முதலில் மாஸ்கோ நகரத்தின் பக்கம் திரும்பியிருந்து இப்பால் அவர்களுடன் சேரமுடியாமல் ஆழ்ந்த யோசனையில் மூழ்கி யிருக்கின்றனர். ஸோவித் கொள்கையானது இஸ்லாத்தை அழிக்கக் கூடிய தன்மையுள்ளதா யிராத பக்ஷத்தில் முன்னமே எல்லா முஸ்லிம்களும் ருஷ்யாவுடன் கைகோத்துச் சினேகம் பண்ணி யிருப்பார்கள். இப்பொழுது நம்முடைய நிலைமையானது இருதலைக் கொள்ளி எறும்பு போலா யிருக்கிறது. ஐரோப்பியரின் ஆதிக்கத்தை ஒழிக்க நாடி மாஸ்கோவின்பக்கம் திரும்பினுல் அங்கே காலஞ்சென்ற லெனின் என்பவருடைய ஸோவித் கொள்கையானது இஸ்லாத்தையே பயமுறுத்த ஆரம்பிக்கின்றது. ஆதலின் நாமே நம்முடையகாரியத்தைச் செவ்வனே நிறைவேற்றிக் கொள்ளாவிடின் மேல்நாட்டு ராஜதந்திரிகள் இன்னும் அதிகமாக நம்மை ஒறுக்கத்தலைப்படுவர்.

இப் பூவுலகமானது இத்தருணத்தில் இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து வருகின்றது: ஒருபுறம் ஐரோப்பியரின்

ஆதிக்கமென்னும் அதிகாரக்குறும்பானது உறுத்திக் கொண்டிருக்கிறது; மற்றொருபுறத்தில் மாஸ்கோவானது நமக்கெல்லாம் உதவி புரியக் கூடியதாயிருந்தும் அவர்களுடைய போல்ஷ்விஸ்மானது நம்முடைய மார்க்கத்தையே அழித்துவிடுமோவென்று அஞ்சவேண்டி யிருக்கிறது; வேறொரு புறத்தில் முஸ்லிம்களின் கிலாபத்தானது துண்டு துண்டாய்ச் சிதறிக் கிடக்கின்றது. இப்படி யெல்லாம் இருந்தும் இஸ்லாமானது இனியொரு போதும் அன்னியருடைய ஆதிக்கத்தின்கீழ் அமைந்து கிடப்பது கூடாதென்று இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் உணர்ந்து கொண்டு விட்டனர்; ஐரோப்பியரின் ஆதிக்கத்தினின்றும் விடுபட வேண்டுமென்னும் உணர்ச்சியானது ஒவ்வொருவருடைய மனத்திலும் சுடர்விட் டெரிந்துகொண் டிருக்கிறது. இந்த ஆத்ம சக்திக்கு ஆகாயப் படையாவது மற்றுமுள்ள தரைப்படை கடற்படை முதலிய வேறு படைகளாவது அவசிய மில்லை. முஸ்லிம்கள் போல்ஷ்விஸக் கக்ஷியைச் சாரவும் வேண்டியதில்லை; அல்லது ஐரோப்பியருடன் எதிர்த்து யுத்தம் புரியவும் வேண்டியதில்லை. நாம் இஸ்லாத்தில் வைத்திருக்கும் ஈமான் மட்டும் உண்மையான உறுதியுள்ளதா யிருக்கும் பக்ஷத்தில் இப்பொழுதிருக்கும் அடிமை ஸ்தானத்தை விட்டு அதி உன்னத நிலைமைக்குப் போவது ஒரு பெருங் காரியமன்று. ஆத்ம சக்திதான் ஆதிகால முஸ்லிம்களைச் சில நூற்றாண்டுகளுக்குள் அவர்களுடைய வெற்றிக் கொடியை மேற்கே கிரனடா (கர்னுதா) முதல் கிழக்கே தஹ்லி (டில்லி) வரையிலும் நிலை நாட்டும்படி செய்து விட்டது. ஆதலின் இவ்வுலகில் இப்பொழுது "முஸ்லிம்கள்" என்று வழங்கப்படுகிறவர்களை யெல்லாம் முதலில் "மூமின்களாக"ச்செய்தல் வேண்டும். பின்னர் ஆத்ம சக்தி தானே வெளி வரும்.

இப்பொழுதுண்டா யிருக்கும் உணர்ச்சியானது இன்னதுதான் செய்யுமென்றும் இன்ன விதத்தில்தான் போய் முடியுமென்றும் ஒருவராலும் செப்புவது முடியாது. ஆனால் ஏனை நாடுகளிலுள்ள முஸ்லிம்களைக் காட்டிலும் இந்த இந்திய நாட்டிலுள்ள முஸ்லிம்களே மிக மந்தகதியி லிருக்கிறார்கள். உட்கலகங்களும் சில்லறைச் சண்டைகளும் வீண்வம்புகளுமே இவர்களின் முக்கிய வேலையாயிருந்து வருகின்றன. பிறருடைய நன் முயற்சியான வேலைகளை அடியோடொழிப்பதே ஆசார சீர்திருத்த மென்று பலர் நினைத்தும் நடந்தும் வருகின்றனர். இந்தியாவிலுள்ள படித்த முஸ்லிம்களும் படியாத முஸ்லிம்களும் தாங்கள் சுயமே தங்களுடைய ஜாதியாரை முன்னேற்றுவதை விட்டுத் தங்களெல்லோரையும் கரை சேர்க்கும்பொருட்டு ஆகாயத்திலிருந்து ஓர் அவதாரப்புருஷன் இறங்கி வரவேண்டுமென்று எதிர்பார்த்திருக்கின்றனர். இஃதோர் வீண் ஏமாற்றமேயாகும். ஆனால் இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக ஏனை நாட்டார் உழைத்து வருவதே போல் இந்தியாவிலுள்ளவர்களும் தாராளச் சிந்தையுடனும் விசால புத்தியுடனும் கூரிய நோக்கத்துடனும் சரியான முன் யோசனையுடன் செவ்வனே உழைத்து வருவார்களாயின் நம்முடைய தீனுல் இஸ்லாத்தின் வெற்றியானது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஆய்விடக்கூடு மென்பதில் அணுவளவும் ஐயமில்லை யென்பதை யாம் இதன் மூலம் ஒவ்வொரு முஸ்லிம் சகோதரருக்கும் அதிவினயமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

Printed at the Guardian Press, 153-B. Broadway, Madras.

# நபிகள்

13(O)
N24

# நாயகமும் நான்கு தோழர்களும்

இத்தலைப் பெயர் அமைந்த அரிய நூலொன்று செவ்விய தமிழ் நடையில் இப்பொழுது நூதனமாக அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றது. முஸ்லிம்களுக்கு இது மிக அவசியமானதெனினும் சரித்திர ஆராய்ச்சியை விரும்பும் இதர மதஸ்தர்களுக்கும் மிகப் பயன்படத்தக்கது; மாணவர்களுக்கும் இன்றியமையாதது. இந்நூலில் நபிகள் நாயகத்தின் ஜீவிய சரித்திரமும், அபூபக்கர் உமர் உதுமான் அலீ (ரலி) ஆகிய நான்கு கலீபாக்களின் சரித்திரமும், அரபிகளின் புராதன நிலைமையும், இஸ்லாத்தினால் அரபு நாடும் அரபிகளும் சீர்திருத்த மடைந்த விவரங்களும், விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் பண்டைக் காலத்தில் அரபி ராஜ்ய மிருந்துவந்த தன்மையை விளக்கிக் காட்டக்கூடிய (அரேபியா, பாரஸீகம், ஆசியாமைனர் முதலிய நாடுகள் அடங்கிய) பூகோளப்பட மொன்றும் இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்நூலைப்படிப்பதால் நபிகள் நாயகத்தின் சரித்திரத்தை உணரலாம்; அவர்களுடைய நான்கு தோழர்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்ளலாம்; முற்காலத்தில் அரபு நாடிருந்த நிலைமையையும், அரபிகளிருந்த தன்மைகளையும், அவர்களின் இராஜரீகமிருந்த இயற்கையையும், கிலாபத்தின் ஆரம்பகால வாழ்க்கையானது எவ்வாறிருந்த தென்பதையும், அக்காலத்திய முஸ்லிம்களின் குடியரசானது எவ்வாறு நிலை நிறுத்தப்பட்டிருந்த தென்பதையும், இன்னும் பற்பல அரிய விஷயங்களையும் நன்குணரலாம். இப்புத்தகம் உயர்ந்த கடிதத்தில் வழுவற அச்சிட்டு அழகிய பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது. சில கலாசாலைகளிலும் உயர்தர வகுப்புக்கு இது பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ராப்பர் பைண்டு ரூ. 1 8 0
உயர்ந்த டக்லின் அல்லது காலிகோ பைண்டு ரூ. 2 0 0
(வி. பி. வேறு)

அமிர்தகலாநிதி புக்டேப்போ,
P. O. BOX NO. 248, சென்னை.

# தாஜ்மஹால்

(அழகிய சித்திரப்படத்துடன் கூடியது.)

நண்பர்களே! 'தாஜ்மஹால்' என்றால் யாதோவென்று நினைக்க வேண்டாம். இது, தாஜ்மஹால் என்னும் அற்புத சிற்ப மண்டபத்தின் முழுவிவரங்களும் எழுதப்பட்ட அரிய வோர் புத்தகம். தாஜ்மஹாலின் சிறப்பைப் பற்றிக் கேள்வியாலோ பார்வையாலோ அறியாதார் நம்நாட்டில் சிலரே யிருப்பர். இத்தகைய மகோன்னத கட்டிடத்தைப் பாராதவர் எப்பொழுது பார்ப்போமென்று ஏக்கமுற்றிருப்பர்; பார்த்தவர்கள் அதன் அமைப்புக்களைப் பிறர்க்கு எடுத்து விளக்கிச் சொல்ல முடியாமல் வாயைமென்று கொண்டிருப்பர். ஆதலின் அதன் தன்மையை உணர விரும்புவார்க்கு உபயோகப்படுமாறு இப்புத்தகம் அம்மகத்துவம் பொருந்திய கட்டிடத்தின் முழுவிவரங்களையும் விளக்கிக்காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதனைப்படித்துப் பார்த்தால் தாஜ்மஹாலை நேரில்பார்த்தது போலவே யிருக்கும். நூற்றுக்கணக்கான பணங்களைச் செலவிட்டு யாத்திரை செய்தால் மாத்திரமே அவ்வற்புதமாளிகையைப் பார்க்கலாம். எனினும் சில அணக்களைச் செலவிட்டு இப்புத்தகத்தை வாங்கிக் கொள்பவர் எளிதில் அம்மாளிகையின் தன்மையை உணர்ந்து கொள்ளலாம். மேலும் இதனுடன் தாஜ்மஹாலின் முகப்புப் படமும், அதன் முழுக்கட்டிடப் படமும், அதனைக் கட்டிமுடித்த ஷாஜஹான், இவர் மனைவி மும்தாஜ் இவர்களின் படமும் சேர்க்கப்பட் டிருக்கின்றன; இப்படங்களுக்கே இப்புத்தக விலை போதாது. விலை அணு 4. வேண்டுவோர் 5 அணு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

அமிர்தகலாநிதி புக்டெப்போ,
தபாற்பெட்டி 248 சென்னை.

# "ஈமான்"

இவ்வழகிய நூல் இஸ்லாமார்க்கத்தின் ஈமான் சம்பந்தமா மூலக் கொள்கையாகிய ஏழு அம்சங்களைப் பற்றி விரிவாக விளக்கமாகவும் புத்திக்கும் யுக்திக்கும் பொருந்தும் வண்ண இனிய தமிழில் எழுதப்பட்டுள்ளது. "ஈமான் முஜ்மல்" (விவ கப்படாத ஈமான்) "ஈமான் முபஸ்ஸல்" (விவரிக்கப்பட்ட ஈமா ஆகிய இவற்றின் விவரமும் காணப்படுவதுடன் இஸ்லாத் ஈமான் கொள்ள வேண்டிய விஷயவிளக்கமும் அதன் து ஆ உடன் காணப்படும். சிறுவர்களும் உணர்ந்து கொள்ளத்தக்க மாக வரையப்பட் டிருக்கிறது. அவசியமான அரபு வாக்கியங்க சேர்க்கப்பட்டிருக்கின்றன. இஃது ஒவ்வொருவருக்கும் அவ மான நூல். அதிகத் தடிப்பான காகிதத்தில் அச்சிட்டு மிகநே தியாக பைண்டு செய்யப்பட்டது. விலை அணு 4 தான். வேண் வோர் 5 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

# "தாருல் இஸ்லாம்"

சென்ற ஆறரை வருடங்களாக இஸ்லாத்தின் மேன்மைக்கா ஊழியம் செய்துவரும் இவ்வுயர்தர மாதாந்த சஞ்சிகையைப்பற் அதிகமாய் ஒன்றும் கூறத் தேவையில்லை. இதன் மேன்மையையு அழகையும் அறியாதார் இத்தமிழுலகிலும் உண்டோ? இதுவ யில் 5000க்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனுல் பெரும்பய அடைந்து வருகின்றனர். இஸ்லாத்திற்கும் இதர மதங்களுக்கு இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தா மைகளையும், நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரி கையா யிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்த துக்கும், கல்வியின் முன்னேற்றத்துக்கும் இப்பத்திரிகையே கங்க ணங்கட்டிக்கொண் டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக்குறைவானதாகவே காணப்படும். உள்நாட்டுக்கு வருஷசந்தா ரூபா 3 தான். வெளிநாடுகளுக்கு ரூபா 4. ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,

சென்னை.